




www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

09 OCTOBER 2022 - SUNDAY | Pages - 11 | E Paper - # 010 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk


## தி.மு.க தலைவராக மீண்டும் ஸ்டாலின்



(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

தி.மு.க தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் இரண்டாவது முறையாக போட்டியின்றி தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

02 ›››

# பிறந்த தின பரிசாக மஹிந்தவுக்கு பிரதமர் பதவி

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இதற்கான கையெழுத்து வேட்டையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நவம்பர் 18ம் திகதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளாகும். இந்த நிலையில் அவருக்கு பிறந்த நாள் பரிசாக பிரதமர் பதவியை பெற்றுக் கொடுப்பதற்கு மொட்டு கட்சி உறுப்பினர்கள் நடவடிக்கைகளில்

02 ›››

## மொட்டு எம்பிக்கள் கையெழுத்து வேட்டை



## நபிகளாரின் போதனைப்படி புரிந்துணர்வுடன் நடப்போம்

### மீலாத் செய்தியில் ஜனாதிபதி

இலங்கை மற்றும் உலக முஸ்லிம்களால் பெரிதும் மதிக்கப்படும் முஹம்மது நபி அவர்களின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகின்றது.

உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்களின் மார்க்கப் போதகராக விளங்கிய அவரது உபதேசங்கள், முன்பை விட இன்றைய சமூகத்தில் நிலவும் சூழ்நிலையைப் போக்க உதவும் என்று நான்

02 ›››

## தேசிய மீலாத் விழா நிகழ்வுகள் இன்று ஜாமிஆ நளீமிய்யாவில்

(அஜ்வாத் பாஸி )

இவ்வருடத்திற்கான(2022) தேசிய மீலாதுன் நபி விழா பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் இன்று (09)தி நடைபெறுகின்றது.

முஸ்லிம் சமய கலாசார

02 ›››

# ஹரினுடன் பனிப்போர்

### இராஜினாமாவுக்கு தயாராகும் டயானா!

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து அரசாங்கத்தில் இணைந்திருக்கும் சுற்றுலாத்துறை ,காணி அமைச்சர் ஹரின் பெர்னான்டோவுக்கும், சுற்றுலாத் துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கும் இடையே உருவாகியிருக்கின்ற பணிப்போர் காரணமாக தான் அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யப் போவதாக டயானா கமகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கஞ்சாவை ஏற்றுமதி செய்து டொலர் சம்பாதிக்க வேண்டும் என குரல் கொடுத்து வரும் டயானாவுக்கும் அமைச்சர் ஹரின் பெர்னான்டோவுக்கும்

02 ›››

## மஹிந்தவின் கோட்டையை கைப்பற்றிய சஜித்



ஹம்பாந்தோட்டை பலநோக்கு கூட்டுறவு சங்க தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான சமகி ஜனபலவேகய கட்சிக்கு வரலாற்று வெற்றி கிட்டியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கோட்டையான ஹம்பாந்தோட்டை பிரதேசத்துக்கான இத் தேர்தலில் சமகி ஜனபலவேகய கட்சியில் போட்டியிட்ட ஒன்பது

02 ›››

## மதஸ்தலங்களுக்கு மின்சாரநிவாரணம்

அதிகரித்துள்ள மின்சார கட்டணத்துக்கு நிவாரணம் வழங்கும் வகையில்

03 ›››

## சரியான பாதையில் பயணிக்கிறார் ரணில்

### மஹிந்த புகழாரம்

நாட்டை முன்னேற்றுவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்தும் இருக்கும் என, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில், ஒரு சிறந்த பாதைக்கு திரும்பியுள்ளதாக தாம் நம்புவதாக கலுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் முன்னாள்

03 ›››

## இலங்கையை கைவிட்ட IOC நாடுகள்



ரவூப் ஹக்கீம் கருத்து!

”ஜெனிவா தீர்மானம் தொடர்பில் கடந்த காலங்களில் இலங்கைக்கு ஆதரவாக இருந்த நாடுகளும் இம்முறை நடுநிலை வகித்திருக்கின்றமை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எமது நாட்டுக்கு

02 ›››

## கண்ணீர் சிந்திய ரோஹித



முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்தன, கண்ணீர் விட்டு அழுத சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற

02 ›››

## சம்மாந்துறையில் மீலாத் வசந்தம்

மனிதநேய நற்பணிப் பேரவை, சம்மாந்துறை - ஸ்ரீலங்கா, இர்ஷாத் ஏ காதர் நற்பணி மன்றம் இணைந்த ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள ‘மீலாத் வசந்தம்’ நிகழ்வு இம்மாதம் 09 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6.20 முதல் சம்மாந்துறை அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி மைதான திறந்த வெளியரங்கில் அஷ்ஷெய் எம்.ஐ.எம்.

03 ›››




# நாம் உட்கொள்ளும் போசனையுள்ள உணவுகள் சிந்திப்பதில், தீர்மானம் நிறைவேற்றுவதில் ஏனைய விடயங்களைப் போன்று தாக்கம் செலுத்துகின்றது

**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

எமது உடல் ஆரோக்கியமாக தொழில் படுவதற்கு போசணைமிக்க ஆகாரங்கள் அவசியம் என்பதை நாம் எவரும் மறுக்க மாட்டோம்.

போசணையுள்ள ஆகாரங்களை உண்ணுவதன் மூலம் உடல் ஆரோக்கியம் அடைவது போன்று மனநலத்திலும் சிந்தனையிலும் தாக்கம் புரிவது பற்றி நம்மில் அநேகர் அவதானம் செலுத்துவதில்லை.

"எமது மூளையின் அன்றாட செயற்பாடுகளுக்கு நாம் உண்ணும் உணவு மிகமுக்கிய தாக்கம் புரிகிறது" என மௌன்ட சௌனாய் மருத்துவக்கல்லூரியின் சின்டியா கிரீன் எனும் மருத்துவர் குறிப்பிடுகிறார்.

எமது உடல் திசுக்கள், இரத்தம், என்புகள் மற்றும் உடலிலுள்ள கலங்கள் அனைத்தும் நாம் அன்றாடம் உட்செலுத்தும் போசணைகளின் மூலமும் மீள் எழுச்சி அடைகின்றன. இதில் மூளையில் உள்ள கலங்கள் மிகவும் முக்கியமானவை. நாம் உட்கொள்ளும் போசணை குறைவான ஆகாரங்கள் எமது உடலை ஆரோக்கியமற்ற நிலைக்கு உள்ளாக்குவது போன்று எமது மனநிலையையும் அப்படியே ஆக்கிவிடுகிறது.

சில வகையான மனநிலையோடு தொடர்பான நோய்களின் தீவிரத்தன்மைக்கு விட்டமின்கள் மற்றும் கனிப்பொருட்களின் குறைபாடு முக்கிய காரணமாக இருப்பதாகவும் போசணை குறைவான ஆகாரங்கள் சிந்தனையையும் அவதானத்தையும் முறையாகப் பேண முடியாமல் செய்வதற்கும் காரணமாக அமைகிறது எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.

நாம் பசித்திருக்கும் நேரங்களில் வேறு விடயங்கள் மீது அவதானம் செலுத்த முடியாமல் போதில் இருந்து இதன் உண்மையைப் புரியலாம்.

எமது உடலையும் சிந்தனையையும் ஒரு நிறுவனமாக ஒன்று சேர்த்துச் செயற்பட இந்த போசனை உள்ள ஆகாரங்கள் தேவைப்படுகின்றன.

அளவான போசணையுள்ள உணவு எமது மூளையின் செயற்பாடுகளுக்கும் உடலின் முறையான இயக்கத்திற்கும் தேவைப்படுகின்றது. அளவுக்கு அதிகமாக உண்ணுகிறவர்களைக் காணும் போது

"என்ன திண்டு திண்டு மாடாகப் பார்க்கிறாயா?" என்று சொல்வதையும், மிகக்குறைவாக உண்ணுகிறவர்களை காணும் பொழுது

"காகம் கொத்துவது போல சாப்பிட்டால் படிப்பும் வராது ஒன்றும் ஏறாது!"

என்று சொல்வதையும் அடிக்கடி காண்கிறோம்.

எமது சிந்தளையில் உணவு ஏதோ ஒரு வகையில் செல்வாக்குச் செலுத்துவதை தெரிந்தோ தெரியாமலோ விளங்கியிருப்பதால் தான் நாம் இவ்வாறு சொல்லக் காரணமாக இருக்கலாம்.

நாம் அன்றாடம் உட்கொள்ளும் போசணையில் சுமார் 30 வீதம் மூளையின் தொழிலிட்பாட்டிக்குச் செல்கிறது. அதனால் ஒன்றினைந்த உடல் தொழில்பாட்டிற்கும் மூளையின் செயற்பாட்டிற்கும் துணைபுரியக்கூடிய உணவுகளை அன்றாடம் உட்கொள்ள வேண்டும்.

முழுத்தானியங்கள்,
அவரை இணங்கள்,
மறக்கறிகள்,
பழங்கள்,
கிரைவகைள்,
விலங்குணவுகள்

என்பவற்றிலிருந்து எல்லாவிதமான போசணை உணவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோன்று சால்மான், தூனா, மெகரல், சார்டின் போன்ற கடல் உணவுகளில் "ஒமேகா 3" அடங்கி இருப்பதால் அது சிந்தனையை ஆரோக்கியமாக வைக்கத் துணைபுரிகின்றது.

---

## இலங்கையை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பட்ட தோல்வி மட்டுமல்ல அவமானத்துக்கும் உரியது."

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இதற்கு முன்னர் எமது நாட்டுக்கு எதிராகத் தீர்மானம் வந்தபோது 11 நாடுகள் ஆதரவாக வாக்களித்திருந்தன. ஆனால், இம்முறை அது 7 ஆகக் குறைவடைந்துள்ளது.

கடந்த காலங்களில் எமக்கு ஆதரவாக இருந்த நாடுகளும் நடுநிலை வகித்திருக்கின்றமை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எமது நாட்டுக்கு ஏற்பட்ட தோல்வி மட்டுமல்ல அவமானமும் ஆகும்.

அதுமட்டுமன்றி இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியத்தின் மூலம் எமக்குச் சாதகமான பதில் கிடைக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தார். ஆனால், அவ்வாறான எந்தச் சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

மேலும், ஜெனிவாவில் எமது நாட்டுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் பொருளாதார மோசடிக் குற்றச்சாட்டு முதல் தடவையாகக் கொண்டுவரப்பட்டதாகும்.

எமது நடவடிக்கை காரணமாகவே நாங்கள் தேவையில்லாத பிரச்சினைக்குள் சிக்கி இருக்கின்றோம்.

புனர்வாழ்வுச் சட்டமூலம் பயங்கரவாதத் தடைச் சட்டம், இனவாதச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் எமது நாட்டுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களாகவுள்ளன" - என்றார்.

---

## நபிகளாரின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நம்புகிறேன்.

உயர்ந்த மனிதப் பண்புகளுடன் பிறந்த அனைவரும் ஒருவரையொருவர் விலகிச்செல்ல முற்படுவதை தவிர்த்து, நபிகளாரின் போதனையைப் பின்பற்றி அனைவரும் புரிந்துணர்வுடன் நடப்பதே அவருக்குச் செய்யும் கௌரவமாகும்.

ஒட்டுமொத்த மனித சமூகத்தைப் போன்று ஏனைய அனைத்தினதும் பாதுகாப்பு, பயன்பாடு, மரியாதை மற்றும் நேர்மை பற்றிய முஹம்மத் நபி அவர்களின் கருத்து உண்மையின் உருவகமாகும். அவர்களின் போதனைக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் மூலம் ஆன்மீக ரீதியில் மட்டுமன்றி சமூக ரீதியாகவும் வெற்றி பெற முடியும்.

அல் அமீன் "நம்பிக்கையாளர்" என்ற புனைப்பெயர் கொண்ட முஹம்மது நபி அவர்களின் பிறந்த நாள், இலங்கை மற்றும் உலகலாவிய முஸ்லிம்கள் உள்ளிட்ட ஏனையோர்களினதும் ஆன்மீக, சமூக முன்னேற்றம் மற்றும் அமைதிக்கு வழிவகுக்க வேண்டும் என நான் பிரார்த்திக்கிறேன்.

---

## ஹரினுடன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இடையே அமைச்சுக்குள்ளே பலத்த பணிப்போர் ஏற்பட்டிருக்கின்றது. தனது அமைச்சுப் பொறுப்புக்கள் பற்றிய வர்த்தமானி வெளியிடப்படாவிடின் தான் அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யப்போவதாக டயானா கமகே எச்சரித்துள்ளார். இதேநேரம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவி தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இவர் பற்றியும் டயானா கமகே குரல்கொடுத்துள்ளார்.

டயானா கமகே அண்மைக்காலமாக விலைமாதர் தொழிலை சட்டபூர்வமாக்க வேண்டும் என்றும், கஞ்சா ஏற்றுமதியை அங்கீகரிக்க வேண்டும் என்றும் கோரிவருகின்றார். அரசாங்கம் கஞ்சா ஏற்றுமதி குறித்து ஆராய்வதற்கு குழு ஒன்றை நியமித்திருக்கின்ற நிலையிலே அமைச்சருக்கும் ,இராஜாங்க அமைச்சருக்குமிடையே பணிப்போர் ஏற்பட்டுள்ளது. இந்த பின்னனியிலே, டயானா கமகே தனது பொறுப்புக்களை சரியாக குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு கேட்டுள்ளார். அவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடாவிடில் தான் இராஜினாமா செய்யப் போவதாக தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தேசியபட்டியலில் இருந்து தெரிவானவரே ஹரின் பெர்னான்டோவும், டயானா கமகேவும் ஆவர். இவர்கள் இருவரும் அரசாங்கத்தின் கரங்களை பலப்படுத்துவதற்காக அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்து வருகின்றனர். இதேநேரம் டயானா கமகே கஞ்சாவை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்றும், இரவு நேரங்களில் நைட் கிளப்களை திறந்து விட்டு வசதிகளை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து வருகிறார். மஹா சங்கத்தினர் உட்பட பலர் இது குறித்து எதிர்ப்பு தெரிவித்திருக்கின்ற வேளையில் நாட்டுக்கு விமோசனம் இதிலிருந்தே கிடைக்கும் என தெரிவித்துள்ளார். பௌத்த நாடான தாய்லாந்தில் இவை எல்லாம் இருக்கின்றது என்றும் அமைச்சர் டயானா தெரிவித்துள்ளார்.

---

## தேசிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

திணைக்கள பணிப்பாளர் இப்றாஹீம் அன்ஸார் தெரிவித்தார்.

சீனன்கோட்டை பள்ளிச்சங்க நிர்வாகிகள் மற்றும் ஊர் தனவந்தர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுடனான விசேட சந்திப்பு கடந்த முதலாம் திகதி சீனன்கோட்டை பாஸிய்யா ஜும்ஆ பள்ளிவாசலில் திணைக்கள பணிப்பாளர் இப்றாஹீம் அன்ஸார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் இறுதியில் அனைவரினதும் ஏகோபித்த முடிவுகளின் பிரகாரம் இவ்வருடத்திற்கான மீலாத் நிகழ்வுகள் ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தில் நடாத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. அதேவேளை, நிகழ்வை சிறப்பிக்குமுகமாக நளீமிய்யா கலாபீடத்தை மையப்படுத்தி முதல்நாள் முத்திரை வெளியீடும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## தி.மு.க...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வேறு யாரும் போட்டியிடாததால் திமுக தலைவராக மு.க. ஸ்டாலின் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேலும், பொதுச் செயலாளராக துரைமுருகன், பொருளாளராக டி.ஆர். பாலு ஆகியோரும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில் திமுக தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் மற்றும் தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெற்றது. பொதுக்குழுவில் திமுக தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் இரண்டாவது முறையாக போட்டியின்றி தேர்வுசெய்யப்பட்டுள்ளார் என்று உள்கட்சி தேர்தல் ஆணையர் ஆற்காடு வீராசாமி அறிவித்தார்.

இதேபோல், திமுக துணை பொதுச்செயலாளராக கனிமொழி எம். பி. நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல், ஐ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ் ஆகியோரும் திமுக துணை பொதுச்செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அறிவிப்பை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். திமுக முதன்மை செயலாளராக கே.என். நேரு நியமிக்கப்பட்டுள்ளார். தி.மு.க. தொடங்கப்பட்டபோது பேரறிஞர் அண்ணா தலைவராக இருந்தார். அவர் மறைவுக்கு பிறகு 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ந் தேதி, முதல்முறையாக தி.மு.க. தலைவராக கருணாநிதி பொறுப்பு ஏற்றார். தொடர்ந்து 11 முறை இந்த பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். கருணாநிதி மறைவுக்கு பிறகு 2016-ம் ஆண்டு மு.க.ஸ்டாலின் தி.மு.க. தலைவரானார்.

---

# சித்தர்கள் குரல் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் அன்னதான நிகழ்வு!



சித்தர்கள் குரல் அமைப்பினரால் பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலயத்தின் வனவாச நிகழ்வை சிறப்பிக்கும் வண்ணம் மாபெரும் அன்னதான நிகழ்வு (5) தலைவர் ஆதித்யன் துணைத்தலைவர் மனோகரன் மற்றும் சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபகத்தலைவர் ஆஸ்தான குருஜி சிவசங்கர்ஜி ஆசியுடனும் ஸ்டூடியோ 96 அனோஜன் மற்றும் சித்தர்கள் குரல் அன்பர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அன்னதான நிகழ்வு மிகச்சிறப்பான முறையில் நடைபெற்றது.

---

## கண்ணீர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மே 9 ஆம் திகதி தனது வீடு தாக்கப்பட்ட சம்பவங்களை நினைவு கூர்ந்து அவர் கண்ணீர் விட்டு அழுதுள்ளார்.

இந்த கூட்டத்தில் உரையாற்றிய ரோஹித அபேகுணவர்தன, மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் ஒரு பயங்கரவாத சம்பவமாகும்.

அன்றை தினம் எனது வீட்டில் இடம்பெற்ற தாக்குதலின் போது அதிஷ்டவசமாக எனது தாயார் இங்கு வந்திருக்கின்றார்.

தற்போது கிடைத்துள்ள வாழ்க்கை ஒரு போனஸாகும். அதனை கொண்டு மீண்டும் ஸ்ரீலங்க பொது ஜன பெரமுனவின் ஆட்சி பலமாக எழுச்சி பெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## மஹிந்தவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பேரும் வெற்றியீட்டியயுள்ளது. குறிப்பிடத்தக்கது.

அளிக்கபட்ட 483 வாக்குகளில் 335வாக்குகளில் 335வாக்குகளைப் பெற்று மகத்தான வெற்றியை சமகி ஜனபலவேகய கட்சி பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றில் முதற்தடவையாக ஹம்பாந்தோட்டை கூட்டுறவு சங்க தேர்தலில் சஜித்தின் கட்சி 9உறுப்பினர்களை வென்றுள்ளதுடன் மொட்டு கட்சிக்கு எந்தவோரு ஆசனமும் கிடைக்கப்பெறவில்லை.

---

## பிறந்ததின...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இறங்கியுள்ளனர். இதன் பொருட்டு அதிகப்படியான எம் பீக்களின் கையெழுத்துக்களை பெற்றுக் கொள்வதற்கான முஸ்தீபுகளும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. அரகல போராட்டத்துக்குப் பிறகு மஹிந்த ராஜபக்ஷ நேற்று சனிக்கிழமை களுத்துறையில் இடம்பெற்ற கட்சி கூட்டமொன்றின்றில் பங்கேற்றிருந்நது குறிப்பிடத்தக்கது.



## சரியான...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி மஹிந்த தெரிவித்துள்ளார்.

"களுத்துறையில் இருந்து ஒன்றிணைவோம்" என்ற தொனிப்பொருளில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, இந்த பொது பேரணியை ஏற்பாடு செய்திருந்தார்.

இலங்கை இன்று பல சவால்களை எதிர்கொண்ட போதிலும், அந்த சவால்களை வெற்றிகொள்ளும் பலம் கட்சிக்கு இருப்பதாகவும், நாட்டு மக்களுக்கு தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனவும் அங்கு தெரிவித்தார்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டைக் காப்பாற்றி வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என தெரிவித்த அவர், ஜனாதிபதி ஐ.தே.க.வைச் சேர்ந்தவர் என்பதாலேயே அப்போது அவரை திட்டினாலும், தற்போது அவர் சரியான பாதையில் செல்கிறார் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணிலுக்கு வாழ்த்துத் தெரிவித்த அவர், அவருக்கு ஆதரவளிப்பதன் மூலம் இந்த பயணத்தை தொடர ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாடுபடுவதாக குறிப்பிட்டார்.

## மதஸ்தலங்கள்..
(முன்பக்கத் தொடர்ச்சி...)

வழிபாட்டு தளங்களை புனித நிறுவனங்களுக்கான குழுவில் இருந்து நீக்கி பொது பணியின் கீழ் கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, 65 ரூபாவாக உள்ள மின்சார அலகு ஒன்றுக்கான கட்டணம் 32 ரூபாவாக குறைக்கப்படும் என அதன் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் இன்று மல்வத்து அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது மத ஸ்தலங்களில் ஏற்பட்டுள்ள மின்சார கட்டண பிரச்சினைக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அவர் விபரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சம்மாந்துறையில்...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமீர், கலாநிதி ஐ.வை.எம். ஹனீப் ஆகியோர் முன்னிலையில் நற்பணிப் பேரவையின் தலைவர் மனித நேயன் இர்ஷாத் ஏ. காதர் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் சிறப்பம்சமாக நாவலர் ஈழமேகம் பக்கீர் தம்பி நினைவரங்கில் மீலாத் கவியரங்கம் தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் இடம்பெறும் கவியரங்கில் கவிதைபாடும் பிரமுகர்களான சட்ட முதுமானி ரவூப் ஹக்கீம் (பா.உ), பஷீர் சேகுதாவூத், சட்டத்தரணி ஹூனைஸ் பாறூக், கே.எம்.ஏ. றஸாக் (ஜவாத்), சட்டத்தரணி மர்சூம் மௌலானா, சட்டத்தரணி ஏயெம். தாஜ் ஆகியோருடன் சமூக ஜோதி எம்.ஏ. றபீக்கின் சிறப்புச் சொற்பொழிவும் நாகூர் ஈ.எம். ஹனீபா புகழ் மருதமுனைக் கமால்தீனின் இஸ்லாமிய கீதம், மற்றும் பல நிகழ்ச்சிகளுடன் சமய மற்றும் சமூக சேவைகளில் தங்களின் அர்பணிப்பினை வழங்கிவரும் சிலருக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.




## மாவட்டப் பணிப்பாளராக றியாஸ் மீண்டும் நியமனம்!

(பைஷல் இஸ்மாயில்)

அகில இலங்கை YMMA பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளராக மீண்டும் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த எம்.ஐ.முஹம்மட் றியாஸ் அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

YMMA பேரவையின் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் (07) நடைபெற்ற Exco கூட்டத்தின்போது 022 / 2023 ஆண்டுகளுக்கான அம்பாறை மாவட்டப் பணிப்பாளராக 2மீண்டும் நியமிக்கப்பட்டார்.




இதேவேளை அவரின் நியமனக் கடிதத்தை பேரவையின் புதிய தேசியத் தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட் வழங்கி வைத்தார்.


# MEDIA DIRECTORY – 2022

வீட்டிலிருந்தவாறே தபால் மூலம் பெறுங்கள்!




Details of President, President, Parliament, Ministeries, Parliament Members, Provincial Council, Local Authorities, Political Parties, Foreign Mission in Sri Lanka, Honorary Consular Corps, International Organizations, Defence, Religious & Cultural Bodies, Universities, Media Orgazina-tions, Newspaper, Radios, Televisions, SLMMF Members

**Price: 1,100/-** (Book 900/- + Postal 200/-)

Sri Laka Muslim Media Forum
BOC, Lake House Branch, A/C No: 3268511

1,100 ரூபா பணத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வங்கி கணக்கில் வைப்பிலிட்டு, பற்றுச்சீட்டை 0772612288 இலக்கத்துக்கு WhatsApp அனுப்புங்கள்.



# அரங்கம்

### 22 திருத்தப்பட்டதா?

22ஆவது அரசியலமைப்புத் திருத்தப் பிரேரணை மற்றும் கோப், குழுக்களின் புதிய தலைவர்கள், மற்றும் நாட்டில் பொருளாதார நிலை குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஷேட அறிக்கையொன்றை வெளியிட்டது காரணமாக நாட்டின் அரசியல் சூழ்நிலை போன்று பாராளுமன்றமும் இவ்வாரம் பரபரப்பாகவே இருந்தது.

கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப் பதவிகளை எதிர்க்கட்சிகளுக்கு வழங்குமாறு எதிர்க்கட்சிகள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்தன. எதிர்க்கட்சித் தரப்பினரின் கோரிக்கையை 50 ஃ 60 நிறைவேறியது. கோபா கமிட்டித் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த உறுப்பினர் கபீர் ஹாசிம் ஏகமனதாக தெரிவானார். இத்தெரிவு ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரிலேயே மேற்கொள்ளப்பட்டது. இதேநேரம் கோப் குழுவின் தலைவர் தெரிவு வழமைப்போன்று தயாராகும் புலம்பெயர் தமிழர்களுக்கு வாய்ப்பளிப்பது, இந்த நாட்டில் பரபரப்பாகப் பேசப்படும் கஞ்சாப் பயிர்ச் செய்கையை உமந்தாவும் இணைந்து நடுவது போன்ற ஐந்து அம்சத் திட்டத்தை தேரர் ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்காக முன்வைத்தார்.

உத்தேச பல்கலைக்கழகத்தை எந்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்துடன் தொடர்புபடுத்தப்படும் என்ற ஜனாதிபதி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அங்கிருந்த பேராசிரியர், அமெரிக்க பல்கலைக்கழகம் என்று தெரிவித்தார். அது லான்ட் கிரான்ட் பல்கலைக்கழகமா என ஜனாதிபதி கேள்வி எழுப்பினார். அங்கிருந்தவர்களுக்கு இது விளங்கவில்லை. அது பற்றி விளக்கிய ஜனாதிபதி லான்ட் கிரான்ட் பல்கலைக்கழகம் என்பது 18 -19 ஆம் நூற்றாண்டுகளில் அமெரிக்காவில் உயர் கல்வி வாய்ப்புக்கள் அதிகரிப்பதற்காக ஆயிரக் கணக்கு அரச காணிகளை முதலீட்டாளர்களுக்கு வழங்கியது என்று விளங்கினார். இது தொடர்பாக அமெரிக்க பல்கலைக்கழகத்துடன் இணக்கத்துடன் இதனை நிறைவேற்றலாம்.

தயாசிரி ஜயசேகர - தெரிவுக்குழு ஒன்றை நியமித்து கலந்துரையாடப்படும்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க - இது குறித்து நாளை பேசப்படும்.

தயாசிறி ஜயசேகர நீங்கள் முதலில் கூறிய விடயமே சரியானது. இதனை ரிவஸ் பன்னவில்லை. 18 ஆம் திகதி கொண்டு வரப்பட்ட 22 பற்றிப் பேசுவதற்கு கடசித் தலைவர்கள் கூட்டத்தில் சகலரும் இணங்கினர். விரும்புவர்கள் வாக்களிக்கலாம். இல்லாவின் சும்மா இருக்கலாம். அதுவே எமது பிரேரணை. அரசு தரப்பு அதற்கு இணங்கியது.

அரசாங்க கட்சி பிரதம அமைப்பாளர் ரணதுங்க அக்கூட்டத்திற்கு சட்டமா அதிபர் வந்து விலக்கமளித்தார். அப்போது நீங்கள் எழுந்து சென்றுவிட்டீர்கள்.

புத்தளம் மாவட்ட எம்.பி. நிரோஷன் பெரேரா: நான் கூறியது இது இன்றைக்கு ரிவஸாகிவிட்டது என்றே நீங்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் தானே.

கம்பஹா எம்.பி.ஹர்சன ராஜகருண - இந்த அரசு நாம் கூறும்

# என்னுடன் வந்து இணையுங்கள்
## பாராளுமன்றில் மரிக்காருக்கு ரணில் அழைப்பு!





பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்கிரமரத்னவுக்கு ஏழு வாக்குகள் கிடைத்தன. புதனன்று பாராளுமன்றத்தில் இவர் தான் தெரிவு செய்யப்படப்போகிறார் என்று பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார். "மொலே ஹதவன்" (ஏழு மூளையுடையவரின்) தெரிவு இவரே என்று குறிப்பிட்டார். இச்சந்தர்ப்பத்தில் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. உணர்ச்சி வசப்பட்ட ரஞ்சித் பண்டாரதான் ஒரு உண்மையான பேராசிரியர் என்றும் தெரிவித்தபோது சபையில் பலரும் குறுக்கிட்டனர்.

இதேநேரம் வியாழனன்று இடம்பெற்ற கோப் குழுக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதியான அக்கட்சித் தலைவர் அனுரகுமார திசாநாயக்க கலந்து கொள்ளவில்லை. கோப் குழுவின் தலைவராக இருந்த பேராசிரியர் சரித ஹேரத்தை இம்முறை அரச தரப்பினர் பிரேரிக்கவில்லை. மொட்டுக் கட்சியிலிருந்து நீங்கி பாராளுமன்றத்தில் சுயேட்சையாக பேராசிரியர் சரித ஹேரத் செயற்பட்டு வரும் நிலையில் அவரது பெயர் பிரேரிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. மொட்டுக் கட்சியின் இந்த செயற்பாட்டுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்று கருதி ஐக்கிய மக்கள் சக்தி கோப் கமிட்டியிலிருந்த கலாநிதி ஹர்ஷ டி சில்வா ராஜினாமாச் செய்ய வைத்தது. அந்த வெற்றிடத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பேராசிரியர் சரித ஹேரத்தினை நியமிக்குமாறு சிபாரிசு செய்தார். 27 அங்கத்தவர்களைக் கொண்ட கோப் குழுவில் வியாழக்கிழமை கூட்டத்திற்கு 21 பேர் மட்டுமே கலந்து கொண்டிருந்தனர்.

### ரவி - ரணிலிடம் கோரிக்கை.

கடந்த 02ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமன் பத்ர தேரரினால் நடத்தப்படும் உமந்தவ சர்வ கிராமத்திற்கு விஜயம் செய்தார். சமன் பத்ர தேரரின் அழைப்பிலேயே ஜனாதிபதி அங்கு சென்றார். ஐ.தே.க. உப தலைவர் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் தேரர் அழைப்பு விடுத்திருந்தார்.

எமது இந்த செயற்திட்டத்தை சரியாக விளங்கிக் கொள்ளக்கூடியவர்கள் இந்த இருவருமே என்று தேரர் தெரிவித்தார். நல்லாட்சி அரச காலத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும், நிதியமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கவும் இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பியதனை நாம் கண்டோம். ரணில் மற்றும் ரவியை வரவேற்று சமன் பத்ர தேரர் குறிப்பிட்டார். ஜனாதிபதிக்காக விஷேட பலகார போஷனமொன்றும் தயாரித்து வைக்கப்பட்டிருந்தது. பண்டைய சிங்கள மன்னர்கள் கண்ட சகல இனிப்புப் பண்டங்களுமே இங்கு வைக்கப்பட்டுள்ளதாக பலகார மேசையைக் காட்டி தேரர் கூறினார்.

உமந்தாவை கிராமத்திற்கு ஜனாதிபதிக்கு ஏன் அழைப்பு விடுத்தது என்பது பற்றி விளக்கிய தேரர், உமந்தாவ கிராமத்துடன் இணைந்ததாக சர்வதேச விவசாய பல்கலைக்கழகம் ஒன்று ஸ்தாபிப்பது, பாடசாலை பாடப் புத்தகங்களுக்குள் சேர்ப்பது, வடக்குக்கும் தெற்குக்கும் இரு உமந்தாவைகளை உருவாக்குவது, இலங்கையில் முதலீடு செய்வதற்கு தொடர்புகளை ஸ்தாபித்ததற்கு பின் தனக்கு அறிவிக்குமாறு ரணில் விக்கிரமசிங்க தேரரைக் கேட்டுக் கொண்டார்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் உமந்தாவையில் கழித்த ஜனாதிபதி பிற்பகல் 4.30 மணியளவில் குருநாகலை பேராயரைச் சந்திப்பதற்காக குருநாகலைக்குச் சென்றார். ரவி கருணாநாயக்கவும் ஜனாதிபதியுடன் அவரின் வாகனத்திலேயே சென்றார்.

### 22க்கு நடந்தது என்ன?

22ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் கடந்த வியாழன் வெள்ளி தினங்களில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட ஏற்பாடாகியிருந்தது. இத்திருந்த சட்டமூலம் நிதி அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைகளுக்குழுக் கூட்டத்திலும் சில தினங்களுக்கு முன் நிறைவேற்றப்பட்டிருந்தது. பொதுஜன பெரமுனவின் சுமார் 30 பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி செயலாளர் சாகர காரியவசம் தலைமையில் எதிர்ப்புத் தெரிவித்தமையையடுத்து அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. புதனன்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் 22 ஐ அடுத்த பாராளுமன்ற அமர்வில் விவாதிப்பதற்கு தீர்மானித்தள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன வியாழனன்று பாராளுமன்றத்தில் அறிவித்தார். இத்தீர்மானம் குறித்து கடந்த சில தினங்களாக அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கடும் விமர்சனங்களை எழுப்பினர். அமெரிக்கா சென்றிருக்கும் பசில் ராஜபக்ஷவின் தேவைக்கேற்பவே இந்த திருத்தச் சட்டமூலம் இன்று சமர்ப்பிக்கப்படவில்லை என ஐக்கிய மக்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இது தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில் யாரையும் திருப்திப்படுத்தும் நோக்கில் இது கொண்டுவரப்படவில்லை என்றும், சகலரது இணக்கத்துடன் யாப்புத் திருத்தம் கொண்டு வரப்படவேண்டும் என்பதனாலேயே அரசாங்கம் இதனை ஒத்தி வைத்ததாகவும் அரசாங்கக் கட்சி பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

### 22 உருவாக்கப்பட்டது என்று கூறுவது தவறானது என்றும் அவர் தெரிவித்தார்

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க 22ஆவது யாப்புத் திருத்தம் உருவாக்கப்படடதாக தவறான கருத்து ஒன்று கூறப்படுகின்றது. அப்படி ஒன்றும் நடக்கவில்லை. இந்தத் திருத்தங்கள் மக்கள் எதிர்பார்க்கும் திருத்தங்கள் அல்ல. எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளர் இது குறித்து மேலும் கலந்துரையாட வேண்டியுள்ளதால் தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பது சகலரதும் எதனையும் ஏற்றுக் கொள்வதில்லை. உங்களுக்குத் தேவையானதையே செய்கிறீர்கள். இன்றைக்கு இது ரிவலாக்கப்பட்டு விட்டதாக எங்களுக்கு பந்தைப் பாஸ் பண்ண வேண்டாம். இன்றைக்கு இதனை ரிவஸாக்கிவிட்டீர்கள்.

தலைமை தாங்கும் உறுப்பினர் விதானகே, உங்களுக்குத் தேவையான பதில் கிடைத்துவிட்டது தானே.

### சம்மந்தன் ஐயாவிடம் மன்னிப்புக்கோரிய பேஸ்புக் பதிவாளர்

தமிழர் கூட்டமைப்பின் தலைவரான ஆர்.சம்பந்தனை பற்றி அவதூறான செய்தியொன்றை முகநூல் மூலம் பதிவொன்றைச் செய்த ஒருவர் பாராளுமன்றத்தில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை குழுவில் ஆஜராகி மன்னிப்புக் கோரியுள்ளார்.

நிதி அமைச்சரும், .. சிறப்புரிமை பற்றிய குழு முன் ஆஜரான குறிப்பிட்ட நபர், சம்பந்தன் ஐயாவின் சிறப்புரிமை தனது பேஸ் புக் பதிவு மூலம் மீறப்பட்டிருப்தாக ஏற்றுக் கொண்டு மன்னிப்புக் கோரியுள்ளார். கடந்த 4ஆம் திகதி பாராளுமன்றக் கூட்டத்தில் ஆஜராகுமாறு குறிப்பிட்ட நபர் அழைக்கப்பட்டிருந்தார். தான் செய்த தவறினை ஏற்றுக் கொண்டதனையடுது நிபந்தனையுடன் விசாரணை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பாக மன்னிப்புக் கோரி பிரசித்த பத்திரிகை ஒன்றிலும் சம்பந்தப்பட்ட முகப்புத்தகத்திலும் அறிக்கை வெளியிட வேண்டும் என்ற நிபந்தனையில் விசாரணை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் அல்லது பொதுவாகப் பாராளுமன்றம் தொடர்பில் அவதூறான கருத்துக்களை வெளியிட்டால் பாராளுமன்ற (தத்துவம்) சிறப்புரிமைகளும் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கும் உரிமை பாராளுமன்றத்துக்கும் உயர் நீதிமன்றத்துக்கும் இருப்பதாக அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

### அமைச்சரவையில் இணையப் போகும் ஐ.ம.சக்தி எம்.பிக்கள் யார்?

நாம் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தது போல் இவ்வாரம் அமைச்சரவை விசாரிப்பு இடம்பெறவில்லை. மொட்டுக் கட்சி சார்ந்த 10 பேருக்கும், இரு சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அமைச்சர் பதவிகள் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. அமைச்சர் பதவிகளுக்காக புதிய சூட்களைத் தைத்து காத்திருப்போருக்கு இவ்வாரம் ஏமாற்றமே. இது தொடர்பாக மொட்டுக் கட்சியாளர் ஜனாதிபதித் தரப்பிடம் கேட்டபோது ஐக்கிய மக்கள் சக்தியிருந்து சிலர் வரவிருக்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்தே பதவிப் பிரமாணம் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து அமைச்சர் பதவி பெறுபவர்கள் யார் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. இது இவ்வாறிருக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்காருக்கு தன்னுடன் வந்து இணையுமாறு பாராளுமன்றத்தில் பகிரங்கமாக அழைப்பு விடுத்தார். ஜனாதிபதி ஜப்பான் செல்லும்போது சிங்கப்பூரில் முன்னாள் மத்திய வங்கி ஆளுனர் அர்ஜுன் மகேந்திரனைச் சந்தித்தது தொடர்பாக மரிக்கார் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டபோது பாராளுமன்றக் கட்டடத்திலிருந்த ஜனாதிபதி சபைக்குள் பிரவேசித்து பதிலளித்தார். அடுத்த போராட்டம் மத்திய தர வகுப்பினரா ஆரம்பிப்பார் என மரிக்கார் குறிப்பிட்டதற்கு ரணில் விக்கிரமசிங்க ஹிருணிக்காவும் இணங்கிவிட்டீர்களா? நீங்கள் கூறிய கருத்தினை முன்பு கூறியிருந்தார் என்று தெரிவித்த போது, குறுக்கிட்ட மரிக்கார் ரணிலை வீழ்த்த நீங்கள் எங்கள் தலைவராக இருக்கும்போது நான் எப்படி இருந்தேன் என்பது உங்களுக்கு தெரியும் தானே என்றார். அப்படியாயின் மரிக்காருக்கு என்னுடன் வந்து இணைய அழைப்பு விடுகின்றேன் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 OCTOBER 09 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# இஸ்லாம் பாடநூல் விநியோகம் அவசரமாக நடைபெற வேண்டும்

எம்.எஸ். அமீர் ஹுசைன்

முஸ்லிம் பாடசாலைகளில் குறிப்பிட்ட சில வகுப்புகளுக்கான இஸ்லாம் பாட பாடநூல் விநியோகம் 2021 டிசம்பர் மாதம் அளவில் நிறுத்தப்பட்டதால் முஸ்லிம் மாணவர்கள் இஸ்லாம் பாடத்தை கற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். 2021 டிசம்பர் மாதம் இலங்கை கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் உத்தரவின் பேரில் தரம் 6,7, 10 ஆகிய மாணவர்களுக்கான இஸ்லாம் பாடநூல் விநியோகமும் க.பொ.த. (சா. தர) மாணவர்களுக்கான இஸ்லாம் பாடநூல் விநியோகமும் நிறுத்தப்பட்டது. அத்துடன் விநியோகிக்கப்பட்டிருந்த அதே பாடத் திற்கான பாடநூல்களும் மீளப் பெறப்பட்டது.

மேற்படி ஆணையாளர் நாயகத்தின் உத்தரவுக்கமைவாக முஸ்லிம் பாடசாலைகளுக்கான இஸ்லாம் பாடநூல் விநியோகம் நிறுத்தப்பட்டோடு விநியோகிக் கப்பட்டிருந்த பாட நூல்கள் மீளப் பெறப்பட்டு இப்போதைக்கு 11 மாதங்கள் அளவில் கடந்து விட்டன. இந்த பாடநூல் விநியோகத் தடையானது தற்காலிகமானதும் என்றும் அதற்கான திருத்தப்பட்ட பாடநூல்கள் விரைவில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதாயினும் இதுவரையில் குறித்த வகுப்பு மாணவர்களுக்கான இஸ்லாம் பாடத்திற்கான பாடநூல்கள் வழங்கப்படாமை அரசாங்கத்தால் திட்டமிட்ட அடிப்படையில் முஸ்லிம் மாணவர்களது கல்வி உரிமையை மீறும் செயலாகவே கருத முடிகின்றது.

இவ்வாறு பாடநூல் விநியோகம் நிறுத்தப்பட்டமைக்கான காரணங்களாக அப்போது சொல்லப்பட்ட விடயம் நாட்டின் பாதுகாப்புக்கும் இன நல்லுறுவுக்கும் பாதகமான சில விடயங்கள் இந்த இஸ்லாம் பாடநூல்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததாக கூறப்பட்டது. 2019 ஏப்ரில் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டு தாக்குதலின் பின்னர் எழுந்த நிலைமைகளோடு முஸ்லிம்கள் பலவேறு வழிகள் மூலமாக நாட்டில் இஸ்லாமிய பயங்கரவாத்தை ஊக்குவிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு சிங்கள தீவிவிரவாதிகளால் முன்வைக் கப்பட்டு வந்தது.

அதன் அடிப்படையிலேயே பாடசாலைகளில் போதிக்கப்படுகின்ற இஸ்லாம் பாடத்திலும் கண் வைக்கப்பட்டு காலா காலமாக கற்பிக்கப்பட்டு வந்த இஸ்லாம் மதத்தோடு சம்பந்தப்பட்ட சில விடயங்களை பயங்கரவாதத்தை தூண்டும் விடயங்கள் என்ற அடிப்படையில் வியாக்கியானம் செய்யப்பட்டது. அதனால் கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தினால் இவ்வாறு முஸ்லிம் மாணவர்களது இஸ்லாம் பாட போதனைக்கான பாடநூல் விநியோகம் அப்போதைய ஆட்சி காலத்தில் ஏற்பட்ட கடுமையான அலுத்தம் காரணமாக தடை நிறுத்தப்பட்டது. இதனால் க.பொ.த. (சா. தர) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் உட்பட 6.7.10 ஆம் வகுப்புகளின் மாணவர்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக நீதிக்கான மையம் என்ற அமைப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை செய்திருக்கின்றது. அந்த அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஷாபி எச். இஸ்மயீல் மற்றும் சட்டத்தரணி ஜிப்ரியா இர்ஷாத் ஆகியோர் இணைந்து இந்த முறைப்பாட்டை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்துள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம் மாணவர்களது இஸ்லாம் பாடத்தை கற்பதில் முன்னைய ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட தடை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை சுட்டிக்காட்டி குறித்த தடை உத்தரவை வாபஸ் பெற்று உடனடியாக பாடநூல்களை விநியோகம் செய்ய வேண்டும் என்று அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரை கேட்டுள்ளனர்.

இது காலவரை போதுமான அலுத்தங்கள் கொடுக்கப்படாத நிலையில் இவ்வாறான ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்டிருப்பதை நாம் பாராட்ட வேண்டும். இந்நாட்டின் அரசியல் அமைப்பிற்கமைய இனம், மதம், சாதி, பால் என்ற அடிப்படையில் எந்த ஒரு இனத்திற்கும் அநீதியோ பாரபட்சமோ காட்டக் கூடாது என்று தெரிவிகக் ப்பட்டிருப்பதோடு அவ்வாறு ஏதாவதொரு விடயத்தின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படுமானால் அது அடிப்படை உரிமை மீறலாகும்.

அவ்வாறாயின் முஸ்லிம் மாணவர்களில் குறிப்பிட்ட வகுப்புகைளச் சேர்ந்த மாணவர்களுக்கு அவர்கள் பின்பற்றும் மதத்தை பற்றிய பாடத்தை பாடசாலையில் கற்றுக்கொள்ள முடியாத படி உரிய நேரத்திற்கு பாடநூல் விநியோகம் செய்யப்படாதிருப்பதும் அடிப்படை உரிமை மீறலாகும் என்ற அடிப்படையிலே நோக்க வேண்டி இருக்கின்றது. இலங்கையில் நிகழும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஜெனீவா வரையில் ஒலித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந் இந்த விவகாரம் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தி உடனடியாக முன்னைய தடையை வாபஸ் பெற்று முஸ்லிம் மாணவர்களுக்கு இஸ்லாம் பாடநூல்களை விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸில் மீலாதுன் நபி சிறப்பு நிகழ்ச்சிகள்

(ரிஹ்மி ஹக்கீம்)

கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்கில் (MLSC) நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 முதல் மீலாதுன் நபி சிறப்பு நிகழ்ச்சிகள் காலை 8.30 முதல் மாலை 5.00 மணி வரை MLSC நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அதன் தலைவரும், சியன ஊடக வட்டத்தின் தலைவருமான அஹ்மத் முனவ்வர் தெரிவித்தார்.

இதன்போது பிரதம பேச்சாளராக கல்விமான் கலாநிதி ரவூப் ஸெய்ன் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். அன்றைய தினத்தில் காலை 8.30 மணி முதல் பிரதேச பாடசாலைகளான கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயம், கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம் மற்றும் உடுகொடை அறபா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கிடையிலான விவாதப்போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளது.

காலை 10.30 மணி முதல் கலாநிதி ரவூப் ஸெய்னின் உரை இடம்பெறும். 11.30 மணி முதல் மௌலித் மஜ்லிஸ் அல்ஹாஜ் மௌலவி இஜ்லான் (காஸிமி) தலைமையில் நடைபெறும். அதனை தொடர்ந்து பகல் போசணம் நடைபெறும். அஸர் தொழுகையினை தொடர்ந்து விவாதப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன், அதன் போது பிரதம அதிதியாக அல் ஹிமா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூருல்லாஹ் (நளீமி) கலந்து கொள்ளவுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், விஷேடமாக புனரமைக்கப்பட்ட MLSC நூலகமும் இதன்போது திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அறிவுக் கண்களை திறந்திடும் மகத்தான ஆசிரியர் பணி

– ஹிமாயா ஹமீட் –











“ஒக்டோபர் 6 ஆம் திகதி என்றதுமே ஞாபகத்துக்கு வருவது ஆசிரியர் தினமாகும்”

யுனெஸ்கோ அமைப்பினால் ஒக்டோபர் 5ஆம் திகதி ஆசிரியர் தினமாக அறிவிக்கப்பட்டாலும், ஒக்டோபர் 6ஆம் திகதியையே எமது நாடு ஆசிரிய தினமாகக் கொண்டாடி வருகின்றது. இந்தத் தினமானது ஆசிரியர்களை கௌரவிக்கவும், அவர்களது சேவையை பாராட்டுமுகமாகவும் 1994 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்” என்ற கொண்றைவேந்தனின் பாடலில் ஔவையார், உடலுக்குக் கண்கள் எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததோ, அவ்வாறே ஒருவரது வாழ்க்கைக்கு எண்ணும் எழுத்தும் இரண்டு கண்களைப் போன்றது என்று கல்வியின் சிறப்பினைப் போற்றிப் பாடியுள்ளார். அத்தகைய சிறப்பு மிக்க கல்விச் செல்வத்தை மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களை கௌரவிக்கும் தினமே ஆசிரியர் தினமாகும்.

வெறும் மண் கலவையாக ஐந்து வயதில் ஒப்படைக்கப்படும் ஒரு மாணவனை சகிப்புத் தன்மை, பொறுமை, அர்ப்பணிப்பின் மூலம் அதற்கொரு வடிவம் கொடுத்து சிற்பமாக செதுக்கி சமுதாயத்தில் சிறந்த மனிதனாக உருவாக்குபவர்கள் ஆசிரியர் சமுதாயமே.

ஒரு மாணவன் முதல் நாள் பாடசாலைக்கு நுழையும் போது பயத்துடனும், பதற்றத்துடனும் உள்ளே செல்கிறான். நாளுக்கு நாள் ஆசிரியர் வழங்கும் அன்பும், ஆதரவும் அவனை ஆசிரியருடன் ஒட்டி உருவாட வைக்கின்றது. காலப் போக்கில் அவன் தாயின் அரவணைப்பையும், தாண்டி ஆசிரியரின் மேல் அன்பை பொழிகின்றான். ஆசிரியரின் அறிவுரை மற்றும் கண்டிப்பை அவன் இனிதே ஏற்று அதன் படி நடக்கவும் ஆரம்பிக்கின்றான்.

முதலில் ஒரு மாணவன் ஆசிரியரிடம் மரியாதையை கற்றுக் கொள்கின்றான். ஆசிரியரை எப்படி மரியாதை செய்வது என்பதை அவன் கற்பதன் மூலம் பிற மனித சமுதாயத்தையும் மதிக்கக் கற்றுக் கொள்கின்றான்.

கரும்பலகையை ஆயுதமாக மாற்றி ஒவ்வொரு எழுத்துக்களையும் அழித்து எழுதும் பொழுதும் அவை மாணவனின் மனதில் ஒளிக்கீற்றாய் இடம்பிடிக்கின்றது. மாணவனாய் உள்நுழையும் ஒருவன், ஆசிரியராக, வைத்தியராக, வக்கீலாக, நாட்டின் தலைவராக, சிறந்த பிரஜையாக என பல்வேறு கோணங்களில் சமுதாயத்தில் நிலைத்து நிற்க ஆசிரியர்களின் அளப்பரிய சேவை முக்கியம் பெறுகின்றது.

நல்லொழுக்கத்தையும், நற்பண்புகளையும், சமுதாயத்தை எதிர்கொள்வதற்கான தைரியத்தையும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். அழிவில்லாக் கல்வியை கற்றுத் தரும் ஆசிரியர்கள் என்றும் உயர்ந்த இடத்தில் வைத்து பாராட்டவேண்டியவர்களே.

மாணவர்களுக்கிடையில் இன, மொழி பேதங்கள் மறந்து அனைவரும் மனிதர்கள் என்ற உணர்வை விதைப்பவர்கள் ஆசிரியர்களே. ஒரு குழந்தையை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்துபவர்கள் பெற்றோர்கள் என்றால், அந்தக் குழந்தைகளுக்கு உலகத்தையே அறிமுகப்படுத்துபவர்கள் ஆசிரியர்களே.

ஒரு மாணவனுக்கு சிறந்த ஆசிரியரின் வழிகாட்டுதல் கிடைக்கும் போது அவன் எப்படிப்பட்ட மன நிலையில் இருந்தாலும், காலப் போக்கில் சிறந்த மாணவனாக உருமாறுகின்றான். அவர்கள் காட்டும் அன்பும் கரிசனையுடன் கூடிய கற்றல் செயற்பாடும் அவனை தானும் கற்வேண்டும், சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது.

நண்பன், வழிகாட்டி, பெற்றோர், சகோதரன் என அனைத்து உறவுகளையும் ஒன்றாகக் கொண்டு ஒருவனை வழிநடத்த முடியுமென்றால் அது கல்வியைப் போதிக்கும் ஆசிரியராலேயே முடியும். இன்றைய மாணவர்கள் நாளைய தூண்கள். அந்தத் தூண்களை வடிவமைப்பது ஆசிரியர்கள் தான். கல்வி வளம் பெற்ற ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்கிட வேண்டுமென்ற நோக்கோடும் லட்சியத்தோடும், தியாக உணர்வோடும் ஆசிரியர்கள் செய்யும் பணியை ஒரே நாளில் போற்றி முடிக்கவோ, ஏட்டில் வடித்து முடிக்கவோ முடியாது.

மனிதர்கள் வரலாற்றை உருவாக்குகிறார்கள் என்றால், நல்ல எண்ணங்கள் தான் சிறந்த மனிதர்களை உருவாக்குகின்றன. இந்த நல்ல எண்ணங்களே அவர்களை வரலாற்றில் பதிய வைக்கின்றது. அப்படி வரலாற்றில் இடம்பிடித்தவர்களின் பின்னால் ஏதோ ஒரு வகையில் ஆசிரிய குலாம் இருக்குமென்பதை மறுக்கமுடியாது.

வேறெந்தத் துறைக்கும் இல்லாத அதிக முக்கியத்துவமும், பொறுப்பும் இந்த ஆசிரிய சமூகத்தையே





சாருகின்றது. ஒருவன் ஒரு ஏட்டை வாசிக்கின்றான். அதிலிருந்து கருத்துக்களை உணர்கின்றான். அதன் படி நடக்கின்றான். அதனை மற்றவர்களுக்கும் எடுத்துரைக்கின்றான் என்றால் அவன் எதோ ஒருவகையில் ஒருவரிடம் கற்றுத் தான் தேரியிருக்க வேண்டும். ஒரு எழுத்தையோ அல்லது அதன் அர்த்தத்தையோ கற்றுக் கொடுத்தவன் ஆசிரியர் என்ற அந்தஸ்தை பெறுகின்றான். யாரும் இப்பூமியில் பிறக்கும் போதே அனைத்தையும் அறிந்தவனாக பிறப்பதில்லை. அவனுக்கு முதல் ஆசான் பெற்றோர்கள். அதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள் கற்றுக் கொடுப்பதையே பாடமாகக் கொள்கின்றான்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியரை பொறுத்தவரையில் அவர்கள் குழந்தைகளாகவே மாறி தாம் பெற்ற பிள்ளைகள் போன்று அன்புடனும், கரிசனையுடனும், பொறுமையுடனும் அவர்களை வழிநடாத்துகிறார்கள். குழந்தைகளுக்கு பாடம் கற்றுக் கொடுக்கும் போது அவர்களும் மழலைகளாகவே மாறுகிறர்கள். அவர்களது மழலை பேச்சாலும், மழலை சிரிப்பாலும் குழந்தைகள் இனிதே கல்வியைத் தொடங்க ஆரம்பிக்கின்றது.

உன்னால் எதுவுமே முடியாது என்று அடி மட்டத்திற்கு தள்ளிவிட்ட சமுதாயத்திற்கு மத்தியில், உன்னால் மட்டுமே முடியும் என்று கூறி தன்னம்பிக்கையை விதைத்து கண்டிப்பாலும், அன்பாலும் ஒரு சிற்பமாக செதுக்கி அவனுக்குத் தேவையான ஊக்கமும், தன்னம்பிக்கையும், நன்னெறிகளையும் வழங்குவதன் பிரதிபலனே ஒருவன் நன்னடத்தை மிக்க ஒருவனாக சமுதாயத்தில் வலம் வர உதவுகின்றது

ஆசிரியர்களது பணியை வேறெந்தப் பணியுடனும் ஒப்பீட்டுப் பார்க்கமுடியாது. அந்தளவிற்கு மகத்துவமான ஒரு பணியாகவே இன்றளவும் திகழ்கின்றது. அறியாமை என்ற இருளை நீக்கி அறிவுக் கண்ணை திறந்திடும் மகத்தான பணியினை ஆற்றிவரும் ஆசிரியப் பெருமக்களே.

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக “கொரோனா” எனும் கொடிய நோய் உலகை தாக்கிய போது பல்துறைகளிலும் வேலை செய்தவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. ஆனால் இந்த ஆசிரியர் குலாத்திற்கு விடுமுறை வழங்கப்பட்டாலும், அவர்கள் வீட்டிலிருந்தவாறே மாணவர்களுக்குக் கல்வியை புகட்ட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். “ZOOM” வகுப்பினூடாக கட்டாய கல்வியை வழங்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் கட்டளைக்கு இணங்க அவர்கள் தமது சேவையை செய்தார்கள். வீட்டில் இருந்தவாறு கற்பிப்பது என்பது சவால்மிக்க ஒரு போராட்டமாகவே இருக்கும். அப்படி இருந்தும் கூட அவர்கள் தமது சேவையை மாணவர்களுக்கு வழங்குவதில் பின்னிற்கவில்லை.

அதனைத் தொடர்ந்து பாடசாலை ஆரம்பமானதும் வழமையை விட ஒரு படி மேலாக மாணவர்கள் மீது கவனமெடுத்து அவர்களுக்குக் கற்றல் செய்றபாடுகளை மேற்கொள்வதில் முன்னுரிமை கொடுத்து பாடத்திட்டத்தை சிறந்த முறையில் மாணவர்களுக்கு வழங்குவதில் கரிசணையுடன் செயற்பட்டார்கள்.

ஆசிரியர்கள் தமது தொழிலை வெறும் சம்பளத்திற்காக மாத்திரம் செய்வதால், சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியாது. அவர்களும் மாணவர்களோடு நல்லுள்ளத்தோடு உறவாட வேண்டும். அன்பால் வெல்ல முடியாதது ஒன்றுமில்லை. அந்த வகையில் மாணவர்களுக்கு அன்பை முதற் பாடமாகக் கற்பிக்க வேண்டும். அதன் பின்னர் நல்லொழுக்கத்தையும், நல்லெண்ணத்தையும் உள்ளத்தில் புகட்டவேண்டும். தாம் பெற்ற பிள்ளைகளை வளர்ப்பது போல் தம்மிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களையும் பார்க்கவேண்டும். எடுத்தெதுக்கெல்லாம் அடித்தல் அல்லது மிரட்டுதல் தகாத வார்த்தை பிரயோகங்களால் அவர்களை துன்புறுத்தல், அச்சுறுத்துதல் போன்றவற்றை ஆசிரியர்கள் மேற்கொள்வதை தவிர்க்கவேண்டும்.

கடந்த ஆண்டில் ஒரு பாடசாலையில் ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்குவதற்காக மாணவர்களிடத்தில் பணம் சேர்க்கப்பட்டதும், அதனை ஒரு மாணவன் கொடுக்க மறுத்த காரணத்தினால் அந்த மாணவனை அதிபர் தாக்கியதும் ஒரு கசப்பான அனுபமாகும்.

அதே போன்று ஆசிரியர்கள் பெண் பிள்ளைகளை துஷ்பிரயோகத்திற்குட்படுத்தல், மாணவர்களுடன் தகாத முறையில் நடந்து கொள்ளல் போன்ற ஒரு சில ஆசிரியர்களது இழி செயல்கள் அண்மைய பதிவுகளாக இடம்பெற்றுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது. ஒரு சில ஆசிரியர்களின் இழி செயல் ஆசிரியர் சமுதாயத்திற்கே அவப்பெயரை ஏற்படுத்தியதை யாரும் மறுக்க முடியாது.

இந்த நிலை மாறவேண்டும். ஆசிரியர்களது பணியின் மகத்துவத்தை போற்றிப் புகழுமளவிற்கு ஆசிரியர்கள் தமது பணியை நிறைவேற்ற முன்வரவேண்டும். ஆசிரியர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட சமுதாயத்தை சீர்தூர்க்க வேண்டிய ஆசிரியர்களே அவர்களை சீர்குலைக்கும் நிலைக்குத் தள்ளக்கூடாது.

மாணவர்களை காக்கும் ஆடையாக ஆசிரியர்கள் இருக்கவேண்டும். அவர்களது செயற்பாடுகள் மூலம் இனிவரும் காலங்களில் ஆசிரியர் சமுதாயத்தின் மீது தெளிக்கப்பட்டுள்ள கசப்புணர்வு நீங்கி மதிப்பும், மரியாதையும் கௌரவமும் உண்டாகும் வகையில் ஆசிரியர்கள் நடந்து கொள்ளவேண்டும்.

ஆசிரியர்களின் பணியின் மகத்துவத்தை பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் எடுத்துக் கூறவேணடும். அவர்களை கௌரவிப்பதால், அவர்களை பாராட்டிப் புகழ்வது கடமை என்பதை உணர்த்தவேண்டும்.

வழமை போன்றே இவ்வருடமும் வந்து போன ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களை பாராட்டினோமா, கௌரவித்தோமா என்று கேட்டால் இல்லையென்றே பதில் கிடைக்கும். பொருளாதாரத்தை காரணம் காட்டி கிடைத்த வாய்ப்பையும் நாங்கள் தட்டிக் களித்து விட்டோம் அல்லது நழுவவிட்டோம் என்றே பெரும்பாலானோர் மத்தியிலிருந்து கிடைக்கும் பதிலாக இருக்கும்.

ஆசிரியர்களின் மகிமை, மதத்துவம், அவர்களது கௌரவம் பற்றி பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறுவோம். இனிவரும் காலங்களிலாவது ஆசிரியர்களை தவறாது கௌரவிக்கும் பழக்கத்தை எமது பிள்ளைகள் மத்தியில் கொண்டு வரமுயற்சிப்போம்.

“அறியாமையை நீக்கி அறிவு என்னும் சுடர் கொண்டு வெளிச்சத்தை உருவாக்கும் ஆசிரியர்ளுக்கு எமது ஆசிரியர் தின வாழ்த்துக்கள்.”

## நுவரெலியா மார்கஸ்தோட்ட கீழ் பிரிவில் சிறுவர் தின கொண்டாட்டம்


மார்கஸ்தோட்டம் கீழ்ப்பரிவு கருமாரியம்மன் ஆலய நிர்வாக சபையின் ஏற்பாட்டில் மார்கஸ்தோட்டம் கீழ்ப்பரிவு கருமாரியம்மன் ஆலய அறநெறி பாடசாலையின் சிறுவர் தின விழா ஞாயிற்றுக்கிழமை 02 ஆலயத்தில் நடைபெற்றது.

இதன் போது ஆலய நிர்வாக சபையின் அழைப்பில் நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் ஜெயராமன் வினோத்ஜி அவர்கள் அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கி வைத்ததுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் அந்தோனியார் பாடசாலையின் அதிபர் ஜெயகாந்தன் அவர்களும் கிராம அலுவலர், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# பரிமாற்றத்தின் கதாநாயகன் அஞ்சல்!




● றிபான் இஸ்மாயீல்

ஒக்டோபர் 9 ஆம் திகதி சர்வதேச ரீதியில் உலக அஞ்சல் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. முதன்முதலில் 08.10.1874 ஆம் ஆண்டு சுவிட்சாவாத்தின் பேர்ன் நகரில் சர்வதேச அஞ்சல்ஒன்றியம் Universal Pastail Union ஸ்தாபிக்கபட்டது.

இதை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு வாருடமும் முக்டோபர் மாதம் 9 ஆம் திகதி உலக அஞ்சல் தினம் கடைப் பிடிக்கப்படுகிறது.

இன்றைய சூழலில் தாம் தொலைபேசி, தொலைநகல் மின்னஞ்சல் இணையத்தளம், சமூக வலைத்தளங்கள் என நவீன தொழில்நுட்ப உலகில் வாழ்கிறோம்.

பேஸ்புக், டவிட்டர், வட்சப் என விரல் நுனியில் தகவல்கள் பகிரப்பட்டாலும் கையால் கடிதம் எழுதி தபால் பெட்டிகளில் அனுப்பிய காலத்தை மறக்கமுடியாது.

என்னதான் நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் வருகை தந்தாலும் இன்றும் அரச சேவைகளுக்கும் வேலைவாய்ப்பு நியமனம் மற்றும் ஏனைய நேர்முகத் தேர்வுகளுக்கான அழைப்புக் கடிதங்களும் வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் தொடர்பான கடிதங்களும் தபால் மூலமே மக்களை சென்றடைகின்றன.

உலக தபால்துறை என்பது மற்ற எல்லாத்துறைகளையும் விட சிறப்பானதொன்றாகும். இது மனித வாழ்வின அங்கமாக தற்பொழுதும் விளங்கிக்கொண்டிருக்கிறது. அறிவியல் கருவிகள் கண்டுபிடிப்பதற்கு முன் செய்திக் கருவியாய் விளங்கியது நம் தபால்துறைதான்.

ஆரம்ப காலத்தில் ஒருவர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செய்திகளை அனுப்பப் பயன்பட்டது கடிதங்கள். அவை வெறும் காகிதங்கள் மட்டுமல்ல . சில கடிதங்கள் காவியமாகயும் வரலாறாகவும் ஆகியுள்ளன. ஸ்கொட்லாந்தில் 1712 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தபால் நிலையம்தான் உலகின் மொத்த தபால் நிலையங்களுக்கும் தாய்வீடாகும் . இன்றைக்கும் அந்தத் தபால் நிலையம் மக்கள் சேவையாற்றி வருகிறது.

இன்றைக்கு உலகில் 8 லட்சத்துக்கும் அதிகமான தபால் நிலையங்கள் உள்ளன . உலகிலேயே அதிக தபால் நிலையங்களைக்கொண்ட நாடாக இந்தியா உள்ளது. கிட்டத்தட்ட 1.5 இலட்சம் தபால் நிலையங்கள் இந்தியாவில் உள்ளது.

இலங்கையை 1500 களின் ஆண்ட போர்த்துக்கேயர் காலத்திலும் 1600 களில் ஆண்ட ஒல்லாந்தர் காலத்திலும் தபால்துறையில் போதிய வளர்ச்சிகளோ அபிவிருத்திகளோ காணப்படவில்லை . 1700 களில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே தபால்துறையில் துரித வளர்ச்சியும் , அபிவிருத்தியும் நவீன தொடர்பாடல் உத்திகளும் ஏற்பட்டன.

உலக அஞ்சல் ஒன்றியத்தில் இலங்கை உள்ளிட்ட 150 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. விக்டோரியா மகாராணியின் உருவம் பொறிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது தபால் முத்திரை 1857 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்டது . உலகின் முதல்தர விளையாட்டுப் போட்டியான ஒலிம்பிக் போட்டிகூட கடிதப் பரிமாற்றத்தில் ஏற்பட்ட ஒரு விளைவின் ஞாபகார்த்தமாகவே ஆரம்பிக்கப்பட்டதாக வரலாற்று சான்றுகள் கூறுகின்றது.

உத்தியோகபூர்வமான தகவல் பரிமாற்றங்களுக்கு இன்றும் தபால் முறை அவசியமாகின்றது.

ஆரம்ப காலத்தில் தபால்களைப் போடுவதற்கு தபால்பெட்டிகள் பயன்படுத்தப்படவில்லை. கடிதங்களைக் கொண்டுசெல்பவர்களே கடிதங்களைப் பெற்றும் வந்தனர். 1553 ஆம் ஆண்டு லாங்குவிலே (Longuevile) மாகாண மின்ஷ்டர் பாகுட் (MinSetFougut) என்ற தபால் அதிபரின் மனைவியின் போசனையின் பேரில்தான் தபால்பெட்டி அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. தபால்பெட்டிக்கு மாதிரி வடிவத்தை சார்ளஸ் ரீவ்ஸ் என்பவர் அமைத்துக்கொடுத்தார் . சிவப்பு வண்ணத்தில் தபால்பெட்டிகள் வைக்கப்பட்டதன் காரணம் மக்களின் பார்வையை உடனடியாக ஈர்க்கும் சக்தி கொண்டதாலாகும்.

இலங்கை தபால்துறை என்பது இலங்கை அரசினால் செயற்படுத்தப்படும் தபால் சேவையாகும். இலங்கை முழுவதும் 2500 தடால் அலுவலகங்களும் 3440 உப தபால் நிலையங்களும் 536 முகவர் தபால் நிலையங்களும் 45 தபால் கடைகளும் இயங்கிவருகின்றன . இவற்றில் திணைக்களத்தின் வழமையான சேவைகளான தபால் முத்திரை, முத்திரையிடப்பட்ட பொருட்கள், எழுதுகருவிகள், தொலைபேசி அழைப்புகள், பிரித்தானிய தபாற்கட்டளை, தபால் பொருட்கள் பாரமெடுத்தல், விரைவு தபால் சேவை, தபால் தேசிய சேமிப்பு வங்கிச் சேவைகள், தபால் பை சேவைகள், தந்திச் சேவைகள், போட்டோ பிரதிகள், பதிவஞ்சல், சாதாரண தபால் சேவைகள், உள்நாட்டு வெளிநாட்டு பொதிச் சேவைகள், காப்புறுதி, தபால் அறிமுக அட்டை என்பவற்றுடன் மேலும் பல நவீன காலத்திற்கு வேண்டிய புதிய பல சேவைகளும் ஆற்றப்பட்டு வருகின்றன.

தபால் துறையில் எத்தனையோ நலத்திட்டங்கள் உள்ளன. தபால்துறையில் மக்களின் பயன்பாடு குறைத்து கொண்டே வரும் இவ்வேளையில் அத்துறையையும் நாம் பயன்படுத்தி மகிழ்வதோடு மட்டுமல்லாமல் மக்களாகிய நாம் தபால்துறையைப் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கும் தபால்துறை சார்ந்த தகவல்களை கற்றுக்கொள்ள வழிவகுத்து இத்துறை சார்பாக நமக்காக கடினமாக உழைக்கும் தபால் சேவை ஊழியர்களையும் பொதுநிகழ்வுகளில் கௌரவித்து அவர்களுக்கான மரியாதையை நாம் வழங்கவேண்டும்.

## கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் காணிப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும்

**– இம்ரான் மஹரூப் எம்.பி**

(பைஷல் இஸ்மாயில்)



சிலர் அதன் மூலம் இன ரீதியிலான பிரச்சினைகளை உருவாக்க முயற்ச்சிப்பதாகவும் அவர் குற்றச்சாட்டு.

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் காணிப்பிரச்சினை என்பது மிகவும் மோசமான நிலைப்பாட்டில் உள்ளதாகவும் இன்று இந்த காணி விடயங்களால் இன ரீதியிலான குழப்பங்களை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதுர் பிரதேச செயலக பிரிவில் தோப்பூர் உல்லைக்குளம் கிராத்தில் 576 ஏக்கர் காணியில் குறிப்பாக 96 தமிழ், 110 முஸ்லிம் விவசாயிகளும் விவசாயம் செய்வதாகவும் அதில் சிலருக்கு 1930 ம் ஆண்டு ஆங்கிலேயே ஆட்சிக்காலத்தில் காணி அனுமதி பத்திரமும், ஏனைய சிலருக்கு 1976-1980 ம் ஆண்டு காலப்பகுதியிலும் ஆட்சி உறுதி வழங்கப்பட்டிருப் பதாகவும், யுத்தம் உக்கிரமடைந்த காலங்களில் அந்த பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததால் முஸ்லிம்கள் விவசாய நடடிக்கையில் ஈடுபடாமல் இருந்ததாகவும், 2009 க்கு பிற்பாடு தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையாக விவசாய நடடிக்கையில் ஈடுபடும் பகுதியாக உல்லைக்குளம் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

எனினும் தற்போது அரசியல் பின்புலங்களை கொண்ட சிலரின் உதவியுடன் அரச காணிகளை தனியாருக்கு பணத்திற்கு வழக்குகின்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்ற ஒரு கூட்டம் காணிக்கு பொறுப்பான அதிகாரிகளை இணைத்துக்கொண்டு காணிப்பிரச்சினைகளை உருவாக்குவதாகவும், அண்மையில் மூதூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆளுநர் காணிகளை பொலிஸ், இராணுவத்தை வரவழைத்து அளவிட உத்தரவிட்டதாகவும் அத்துமீறுபவர்களை கைது செய்யப்படுவீர்கள் என்பதாக காணி அதிகாரிகள் தெரிவித்ததாகவும் குற்றம்சாட்டினார்.

## சமாதான நீதவானாக முர்ஷித் நியமனம்!



நிந்தவூர் 13 ஆம் பிரிவைச் சேர்ந்த முஹம்மது அனிபா முஹம்மது முர்ஷித் (05) முழுத் தீவுக்குமான சமாதான நீதவானாக ( Justice of the Peace for the Whole Island) நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டு, கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம் முஹம்மட் றியால் அவர்களின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

முஹம்மது அனிபா , சித்தி ஹனூன் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரான இவர் நீண்ட காலமாக கலை, இலக்கியம் மற்றும் ஊடகம் சார் துறைகளில் ஈடுபாடு காட்டிவருவதோடு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகவும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

## சம்மாந்துறை அல்-இக்ரஃ இஸ்லாமிய ஆங்கில பாலர் பாடசாலையில் சிறுவர் தின நிகழ்வுகள்!







கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக சம்மாந்துறையில் இயங்கிவரும் அல்-இக்ரஃ இஸ்லாமிய ஆங்கில பாலர் பாடசாலையில் உலக சிறுவர் தினம் விமர்சையாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுக்கு இணை அனுசரணையாக சம்மாந்துறை வைத்திய துறையில் முன்னனியில் இயங்கிவரும் அலியாமினாஸ் ரூ ஆசியா வைத்தியசாலையும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை அதிபர் எஸ்.எல். மன்சூர், சம்மாந்துறை முஹைதீன் மாவத்தையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்-இக்ரஃ பாடசாலையின் பிரதி அதிபர் எம்.பி. ஜெஸீலா மற்றும் சம்மாந்துறை வைத்தியசாலை 02ஆம் வீதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்-இக்ரஃ பாடசாலையின் பிரதி அதிபர் எம்.பி. றஸீஸா மற்றும் நிறைவேற்று பணிப்பாளரும் சமூக சேவகருமான அர்ஷத் இஸ்மாயீல், இணைப்பாளரான ஜெ.எம். றகீஸ் உட்பட அலியாமினாஸ் ஆசியா வைத்தியசாலையின் மென்பொறியியளாளரும் எமது நியுஸ்ப்ளஸ் செய்தி பொறுப்பாளருமான ஏ.எம். றிகாஷ், அல் - இக்ரஹ் பாடசாலையின் ஆசிரியர்கள், மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கமாக பிள்ளைகளுக்குத் தூண்டுதலை ஏற்படுத்தக் கூடிய பாதுகாப்பான சுற்றாடலுடன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உடன் வலுவான தொடர்பாடலைக் கொண்டதாகவும், பிள்ளைகளைச் சமூகமயப்படுத்தல், திறன்களின் விருத்தி, தொடர்பாடல் மற்றும் நடத்தை, விளையாட்டு ஆகியவற்றில் அவர்களைத் தயாரப்படுத்தல் போன்றன காணப்பட்டது.

தற்போது இப்பாடசாலையில் ஆரம்ப பள்ளி மற்றும் தரம் 01 முதல் O/L வரையான மாணவர்களுக்கான பாடசாலை பாடங்களும், அஹதிய்யா பாடநெறிகளும் கற்பிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.









# 8ஆவது ஆடவர் டி20 உலகக் கிண்ணம் யார் வசம்?

## இன்னும் இருப்பது 7 நாட்கள்



அப்ரித் வஸீர்

2022ஆம் ஆண்டுக்கான ஐசிசி டி20 உலகக்கிண்ண போட்டிகள் இந்த மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. 8வது வு20உலகக்கிண்ண தொடராக இது அமைந்துள்ளது. கொரோனாவினால் சோர்வடைந்த உலகை இந்த தொடர் போட்டிகள் உற்சாகமூட்டும் என்பதில் சந்தேகமில்லை. இம்முறை இப் போட்டிகள் அவுஸ்திரேலியாவில் நடைபெற ஆயத்த நிலையில் உள்ளன.

மொத்தமாக 29 நாட்கள் நடைபெறும் இந்தத் தொடரில் 45 போட்டிகள் நடைபெறவுள்ளன. அத்துடன், அவுஸ்திரேலியாவில் உள்ள 7 நகரங்களில் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதற்காக அடிலெய்ட், பிரிஸ்பேன், ஜீலாங், ஹோர்பார்ட், மெல்போர்ன், பெர்த், சிட்னி, ஆகிய நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

முதலாவது போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கை மற்றும் நமீபியா அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ளது. அரை இறுதிப்போட்டிகள் சிட்னி, அடிலெய்ட் மைதானங்களில் நவம்பர் 9 மற்றும் 10 ஆம் திகதிகளிலும் ,இறுதிப் போட்டி நவம்பர் 13ஆம் திகதி மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்திலும் நடைபெற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதல் சுற்றின் ஏ பிரிவில் உள்ள நமீபியா, இலங்கை, நெதர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மற்றும் பி பிரிவில் மேற்கிந்திய தீவுகள், ஸ்காட்லாந்து, அயர்லாந்து மற்றும் ஜிம்பாப்வே ஆகிய அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மோதவுள்ளன.

இந்த இரண்டு பிரிவுகளிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறும். இதன்பின், சூப்பர் 12 சுற்று ஏ மற்றும் பி என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் 6 அணிகள் இடம்பெறும். இரண்டு சுற்றிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

சூப்பர் 12 இற்கு நேரடியாக தகுதி பெற்ற முதல் 8 அணிகளும் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

குழு 1: நியூசிலாந்து,இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

குழு 2:பாகிஸ்தான், இந்தியா, தென்னாப்பிரிக்கா மற்றும் பங்களாதேஷ் அணிகள் இடம்பெற்றுள்ளன.

2022 டி20 உலகக் கோப்பைக்கான பரிசுத் தொகை!

2022 டி20 உலகக் கோப்பைக்கான பரிசுத் தொகையை ஐசிசி அறிவித்துள்ளது. ஐசிசி ஆடவர் டி20 உலகக் கோப்பையில் சாம்பியனாகும் அணிக்கு 1.6 மில்லியன் அமேரிக்க டொலர்கள் பரிசுத் தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் இடம் பிடிக்கும் அணிக்கு 8 இலட்சம் அமெரிக்க டொலர்களும், அரையிறுதிப் போட்டியிலிருந்து வெளியேறும் அணிகளுக்கு 4 இலட்சம் டொலர்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சுப்பர் 12 சுற்றில் இடம்பெறவுள்ள 30 போட்டிகளில் வெற்றிப்பெறும் அணிகளுக்கு, ஒரு அணிக்கு தலா 40,000 அமெரிக்க டொலர்களும், சூப்பர் 12 சுற்றுடன் தோல்வியடைந்து வெளியேறும் அணிகளுக்கு தலா 70,000 டொலர்களும், முதலாவது சுற்றில் வெற்றி பெறும் அணிகளுக்கு தலா 40,000 அமெரிக்க டொலர்களும், முதல் சுற்றில் தோல்வியடைந்து வெளியேறும் அணிகளுக்கு 40,000 டொலர்களும் வழங்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டவருக்கான போட்டிகளுக்கான மொத்த பரிசுத்தொகையாக 5.6 மில்லியன் அமெரிக்க டொலரினை சர்வதேச கிரிக்கெட் பேரவை ஒதுக்கியுள்ளது

வு20 உலகக் கிண்ணத்துக்கான போட்டி நடுவர்கள்!

அவுஸ்திரேலியாவில் இம்மாதம் ஆரம்பமாகவுள்ள ஐசிசி வு20 உலகக் கிண்ணத்துக்கான முதல் மற்றும் சூப்பர் 12 சுற்றுகளுக்கான போட்டி அதிகாரிகளை ஐசிசி அறிவித்துள்ளது. ஐசிசி பெயரிட்டுள்ள 20 பேர் கொண்ட அதிகாரிகளின் பட்டியலில், 16 நடுவர்கள் மற்றும் 4 போட்டி மத்தியஸ்தர்கள் இடம்பெற்றுள்ளனர்.

45 போட்டிகள் கொண்ட இம்முறை போட்டித் தொடரில் இலங்கையின் ரஞ்சன் மடுகல்ல பிரதான போட்டி மத்தியஸ்தராக செயற்படவுள்ளார். ஐசிசி இன் போட்டி மத்தியர்கள் குழுவின் பிரதானியான இவர் 8ஆவது தடவையாக வு20 உலகக் கிண்ணத்தில் போட்டி மத்தியஸ்தராக பணிபுரியவுள்ளார்.

இவருடன், ஜிம்பாப்வேயின் அண்ட்ரூ பைக்ரொப்ட், இங்கிலாந்தின் கிறிஸ் ப்ரோட் மற்றும் அவுஸ்திரேலியாவின் டேவிட் பூன் ஆகிய மூவரும் இந்த ஆண்டு வு20 உலகக் கிண்ணத்தில் போட்டி மத்தியஸ்தர்களாக பணியாற்றவுள்ளனர்.

இதனிடையே, 16 பேர் கொண்ட கள நடுவர்கள் குழாத்தில் இலங்கையின் குமார் தர்மசேன இடம்பெற்றுள்ளார். ஐசிசி இன் முன்னணி கள நடுவர்களில் ஒருவராக வலம் வருகின்ற குமார் தர்மசேன, ஏழாவது தடவையாக வு20 உலகக் கிண்ணத் தொடரில் கள நடுவராக பணியாற்றவுள்ளார்

அதேபோல, பாகிஸ்தானின் அலிம் தார், தென்னாபிரிக்காவின் மரைஸ் எரஸ்மஸ் மற்றும் அவுஸ்திரேலியாவின் ரொட் டக்கர் ஆகியோர்

தங்களுடைய ஏழாவது வு20 உலகக் கிண்ணத்தில் நடுவர்களாக பணியாற்றவுள்ளனர்.

முதலாவது போட்டியின் கள நடுவர்களாக ரொட் டக்கர் மற்றும் ஜோயல் வில்சன் ஆகியோர் செயல்பட, மூன்றாவது நடுவராக போல் ரீபெலும், நான்காவது நடுவராக மரைஸ் எரஸ்மஸ/ம் பணியாற்றவுள்ளனர். அத்துடன், ஜிம்பாப்வேயின் அண்ட்ரூ பைக்ரொப்ட் போட்டி மத்தியஸ்தராக செயற்படவுள்ளார்.

அதேபோல, இம்மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சூப்பர் 12 சுற்றுக்கான முதல் போட்டியில் நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன. இந்தப் போட்டியின் கள நடுவர்களாக குமார் தர்மசேன மற்றும் ஏட்ரியன் ஹோல்ட்ஸ்டொக் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

போட்டி அதிகாரிகள் முதல் சுற்று மற்றும் சூப்பர் 12 சுற்றுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளுக்கான அதிகாரிகள் விரைவில் அறிவிக்கப்படுவர் என ஐசிசி அறிவித்துள்ளது.

புதிதாக ஐ.சி.சி விளையாட்டுப்போட்டிகளுக்கு 7 புதிய விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில் உள்ளடக்கப்பட்ட விதிமுறைகள் ஒக்டோபர் 1முதல் அமுலுக்கு வரும் நிலையில் அவை முதன் முதலாக இந்த உலகக்கிண்ண போட்டிகளிலேயே செயட்பாட்டுக்கு வர இருக்கிறது.

01. புதிய துடுப்பாட்ட வீரருக்கான striker விதி.

பிடியெடுப்பு மூலம் ஆட்டம் இழந்த ஒரு துடுப்பாட்ட வீரர் வெளியில் செல்லும் போது புதிதாக வரும் துடுப்பாட்ட வீரர் ளவசமைநச நனெல் துடுப்பாட வேண்டும். முன்னைய விதிமுறையின் படி ஒரு துடுப்பாட்ட வீரர் அடித்த பந்து பிடியெடுப்பதற்கு முன்னர் எதிர் திசையில் இருக்கும் துடுப்பாட்ட வீரரை தாண்டி விட்டால் அவர் பிடியெடுப்பின் மூலம் ஆட்டம் இழந்தாலும் எதிர் திசையில் இருக்கும் துடுப்பாட்ட வீரரே துடுப்பெடுத்து ஆடுவார். அதாவது புதிதாக வருபவர் ழெ-ளவசமைநச பக்கத்திலேயே இருப்பர்.இருப்பினும் புதிய விதிமுறைகளின் படி ஒரு வீரர் ஆட்டமிழந்தால் புதிதாக வரும் ஆட்ட வீரரே பந்தை துடுப்பெடுத்து ஆடுவார்.

02.சலைவா நடவடிக்கைக்கு நிரந்தர தடை.

பந்தை பொலிஷ் செய்யும் விதத்தில் உமிழ் நீரை பயன்படுத்தும் சலைவா(ளயடயைெய) நடவடிக்கையை ஐ.சி.சி குழு இந்த செயல் தாற்று நோயை பரப்பக்கூடும் என கருதி நிரந்தர தடை விதித்துள்ளது. குறிப்பிட்ட சலைவா செயற்பாடு கொரோன நோய் காரணமாக கடந்த இரண்டு வருடமாக தடை செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

03. புதிய துடுப்பாட்ட வீரர் களத்துக்கு வந்து பந்தை எதிர் கொள்ள எடுக்கும் நேரம்.

ஒரு துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்து மைதானத்தை விட்டு செல்லும் வேளையில் புதிதாக துடுப்பாட வருபவர் டீ-20 போட்டிகளில் 90 வினாடிகளுக்குள்ளும் ஒரு நாள் போட்டிகள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் இரண்டு நிமிடங்களுக்குள் வந்து பந்தை எதிர்கொள்ள வேண்டும் என்பதே இந்த விதி முறை. முன்னர், ஒரு நாள் போட்டிகள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் 3 நிமிடங்கள் வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

04. களத்தடுப்பு செய்யும் போது வீரர்களின் ஒழுங்கற்ற நிலை.

ஒரு பந்து வீச்சாளர் பந்து வீச ஆரம்பித்து விட்ட பின் களத்தில் உள்ள தடுப்பாளர் துடுப்பாட்ட வீரரின் கவனத்தை திசை திருப்பும் விதத்தில் தாங்கள் நிற்கும் இடத்தை மாற்றம் செய்தோ அல்லது அசைவுகள் ஏற்படுத்துவதை நடுவர் அவதானித்தால் அபராதமாக 5 ஓட்டங்கள் மற்றும் வீசப்பட்ட பந்து கணக்கில் சேராத பந்தாகவும் நிர்ணயிக்க நடுவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

05. மான் கட் விதிமுறை

மான் கட் விதிமுறை என்பது துடுப்பெடுத்தாடப்படுவதட்கு எதிர் திசை அதாவது பந்து வீச்சாளரின் பக்கத்தில் நிற்கும் துடுப்பாட்ட வீரர் பந்து வீசும் பொழுது எல்லைக்கோட்டை(பசநநள)விட்டு வெளியில் இருந்தால் பந்து வீச்சாளருக்கு அவரை ஆட்டம் இழக்க வைக்க முடியும். இது ரன் ஒவுட் ஆகவே கருதப்படும்.

06. துடுப்பாட்ட வீரர் பந்தை எதிர் கொள்ளும் விதி முறை.

துடுப்பாட்ட வீரர் பந்தை எதிர்கொள்ளும் போது அவரது துடுப்பை அல்லது அவரது உடல் ஆடுகளத்துக்கு உள்ளே இருக்க வேண்டும் இல்லாவிடின் அது னநயன டியடட ஆக கருதப்படும்.மேலும் துடுப்பாட்ட வீரரை அச்சுறுத்தும் வகையில் பந்து வீசி அவரை ஆடுகளத்தை விட்டு வெளியேற வைத்தால் அது நோ போல் ஆக கருதப்படும்.

07. பந்து வீச்சாளர் பந்துவீசும் போது துடுப்பாட்ட வீரர் கிரீஸ்ஸை விட்டு வெளியில் இருப்பதை கண்டு அவரை ஆட்டம் இழக்க செய்வதற்காக அவரை நோக்கி பந்தை வீசி எரிந்து அவரை ஆட்டம் இழக்க செய்ய முனைந்தால் அந்த பந்து னநயன டியடட என கருத்தில் கொள்ளப்படும். இந்த விதி அமுலுக்கு வர முன்னர் இந்த வகையில் எறியப்படும் பந்துகள் நோ போல் ஆக கணக்கெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2007 - 2021 வரை அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர்கள்!

2007: மெத்யூ ஹைடன்
2009: திலகரத்ன
2010: மஹேல
2012: ஷேன் வொட்சன் (அவுஸ்திரேலியா)
2014: விராட் கோஹ்லி (இந்தியா)
2016: தமிம் இக்பால் (பங்களாதேஷ்)
2021: பாபர் அசாம் (பாகிஸ்தான்)

2007 தொடக்கம் 2021 வரை கிண்ணத்தை வென்ற அணிகள்

2007:இந்தியா
2009:பாகிஸ்தான்
2010:இங்கிலாந்து
2012:மேற்கிந்திய தீவுகள்.
2014: இலங்கை
2016:மேற்கிந்திய தீவுகள்.
2021:அவுஸ்திரேலியா

T20 சிறந்த பந்துவீச்சாளர்கள் தரவரிசை!

ஜோஸ் கெசல்வூட்:அவுஸ்திரேலியா
ரஷீத் கான்:ஆப்கானிஸ்தான்
வனிந்து ஹசரங்க:இலங்கை
அடம் ஸம்பா:அவுஸ்திரேலியா
தப்ரய்ஸ் ஷம்சி : தென்னாப்பிரிக்கா

ஆகிய வீரர்கள் முதல் ஐந்து இடத்தை வகிக்கின்றனர்.

T20 சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசை

முஹம்மத் ரிஸ்வான்:பாகிஸ்தான்
சூர்யகுமார் யாதாவ்:இந்தியா
பாபர் அசாம்:பாகிஸ்தான்
அய்டன் மர்க்ரம்:தென்னாப்பிரிக்கா
டேவிட் மாலன்:இங்கிலாந்து

ஆகிய வீரர்கள் முதல் ஐந்து இடத்தை வகிக்கின்றனர்.

பல எதிர் பார்ப்புக்களுடனும் பல்லாயிரம் திறமை வெளிக்காட்டலுக்கும்,பழி தீர்க்கும் களமாகவும் இந்த சுற்றுப்போட்டி அமையவுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.



# நுவரெலியா உதவும் கரங்கள் அமைப்பின் வருட பூர்த்தி விழா!





(செ.திவாகரன்)

நுவரெலியா மார்காஸ்தோட்டம் மேற்பிரிவு தோட்ட இளைஞர் , யுவதிகளின் உதவும் கரங்கள் அமைப்பின் ஒரு வருட பூர்த்தி விழா சனிக்கிழமை (08) மிகச்சிறப்பாக நடைபெற்றது

உதவும் கரங்கள் அமைப்பு ஆரம்பித்து ஒரு வருட பூர்த்தி நிகழ்வும், வாணி விழாவும், வருடாந்த பரிசளிப்பு விழாவும், கலை கலாச்சார நிகழ்வுகளும் மார்காஸ்தோட்ட மேற்பிரிவு ஸ்ரீரங்கா கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் ஜெயராமன் வினோத்ஜி அவர்கள் கலந்து கொண்டதுடன் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களையும் பரிசல்களையும் வழங்கி வைத்ததுடன் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்

மேலும் இந்நிகழ்வில் சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், இளைஞர் சம்மேலன அதிகாரிகள், பொதுமக்கள் என பலர் கலந்து நிகழ்வை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது

# மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இறுதிநாள் வாணி விழாவும், ஏடு தொடங்கி வைப்பு நிகழ்வும்!





(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நவராத்திரி விழாவின் இறுதிநாள் விழாவும், ஏடு தொடங்கி வைக்கும் நிகழ்வும் (05) மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ச.நேசராஜா கலந்துகொண்டு சிறப்பித்தார்.

திருகோணமலை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ சாந்தமூர்த்தி குருக்களினால் இறுநாள்

நவராத்திரியின் விஷேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதையடுத்து, மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ச.நேசராஜா மற்றும் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்

மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் ஆகியோரினால் ஏடு தொடங்கி வைக்கப்பட்டு, அச்சிறுவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வின்போது, இரட்ணம் சஞ்சு சியாமலி சகோதரிகளின் வீணை இசையும், திருகோணமலை ஆனந்த பிரகதீஸ்வரா கலாலய மாணவர்களின் நடனமும் நிகழ்ச்சியும் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இதில் திணைக்களத்தின் காலாச்சார உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் வழக்கை நிரூபிக்க முடியாத காரணத்தால் தள்ளிப்போடுகின்றனர்!



அப்ரா அன்சார்

கைது செய்யப்பட்ட பின் புனையப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருப்பதனால் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக வழக்கினை நிரூபிப்பதற்கு முடியாதிருப்பதனை அறிந்திருப்பதனாலே சட்டமா அதிபர் திணைக்களம் முடிவிற்கு வராது காலம் கடத்திக் கொண்டிருப்பது ஹிஸ்புல்லாவுக்கு செய்யும் பெறும் அநீதி என ஜனாதிபதி சட்டத்தரணி நளிந்த இந்திரதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்த வழக்கு புத்தளம் மேல் நீதிமன்றத்தில் நீதியரசர் அபர்ணா மிஹாமுருகொட முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நளிந்த இந்திர திஸ்ஸ இதனை தெரிவித்தார். சட்டமா அதிபர் திணைக்களத்தை சேர்ந்தவர்கள் நீதியரசர்களது உத்தியோகபூர்வ இல்லங்களுக்குச் சென்று நீதியரசர்களை நீக்குமாறு கேட்டு வழக்குகளுக்கு வர வேண்டாம் என்ற தவறான முன்மாதிரியை வழங்கி இருப்பதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவித்தார்.

ஹிஸ்புல்லா தொடர்பாக தொடரப் பட்டிருக்கும் வழக்குகளின் முழு விபரம் வருமாறு:

வழக்கு இலக்கம்:HC 78/2021.

நீதிமன்றம்- புத்தளம் மேல் நீதிமன்றம்.

சட்டமா அதிபரின் இலக்கம்- EER/19/2020

1.ஹிஜாஸ் உமர் ஹிஸ்புல்லாஹ்

2.சலீம் கான் முஹம்மத் ஷகீல்.

### வழக்கின் பின்னணி விபரங்கள்

முதலாவது பிரதிவாதி ஒரு சட்டத்தரணி ஆவார். இலங்கையில் பரபரப்பான வழக்காக இருந்து 2018ஆம் ஆண்டு ஜனாதிபதி அவர்களால் பாராளுமன்றத்தை கலைத்தது தொடர்பாக வழக்கில் தேர்தல் ஆணைக்குழு அங்கத்துவர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி ஆவார்.

இரண்டாவது பிரதிவாதி புத்தளம் அல்ஸ/ஹைறியா மத்ரசாவின் முன்னாள் அதிபர் ஆவார். சட்டத்தரணி ஹிஸ்புல்லா உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறி 2020 ஏப்ரல் 14 ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டார். அதற்கு ஒரு வருடத்துக்குப் பிறகு சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் இரண்டாவது பிரதிவாதி கைது செய்யப்பட்டார். "சேவ்த பேர்ல்" என்ற அமைப்பின் மூலம் வறுமையை ஒழிப்பதற்காக குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வி புலமைப்பரிசில் மூலம் புத்தளம் மதுரங்குளி அல்/ஹைறியா மத்ரசாவுக்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். அந்த மத்ரசா மாணவர்களுக்கு வன்முறை தொடர்பான கருத்துக்களை போதிப்பதாக கூறி இந்த இருவருக்கும் குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டிருந்தது. அதாவது 2018 ஒக்டோபர் 1 ஆம் திகதி - 30 ஆம் திகதி இடைப்பட்ட காலத்தில் புத்தளம் அல்ஸ /ஹைறியா மத்ரசாவில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும், சமய குழுக்களுக்கும் இடையே மதங்களுக்கிடையிலான எதிர்ப்பு எண்ணத்தை உருவாக்கும் வகையில் விரிவுரைகள் நடத்தப்பட்டதாகவும், யுத்தம் தொடர்பான காட்சிகள் காட்டப்படுவதாகவும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ்(வுயு), அதேபோன்று சிவில் மற்றும் அரசியல் உரிமை தொடர்பான சர்வதேச இணக்கப்பாட்டுச் சட்டத்திலும் (ICCPR) குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருந்தன. 2002 பெப்ரவரியில் மேல் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது. ஒரு வருட காலமாக சிறையில் வைக்கப்பட்டிருந்த அதிபருக்கு அதன் பின் பிணை வழங்கப்பட்டது.

### வழக்குக்கு முன்னாலான சுருக்கம்!

இந்த வழக்கு குறித்து 2022 ஜனவரி மாதம் 28ஆம் திகதி குற்றச்சாட்டுக்கள் வாசிக்கப்பட்ட பின் மேல் நீதிமன்ற நீதியரசர் குமார அபேரத்ன முன்னிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. புத்தளம் அல்/ஹைறியா மத்ரசாவின் மாணவர் என கூறப்படும் முகம்மத் நஸார் மலிக் என்ற 18 வயது இளைஞர் ஒருவர் பிரதி சொலிசிட்ட ஜெனரல் பிரசன்ன சில்வா மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி செல்வி லக்மினி கிரிஹாகமவின் வழிநடத்தலில் சாட்சியமளித்தார்.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி முதலாவது குற்றவாளி சார்பில் குறுக்கு கேள்வி கேட்பது ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது குற்றவாளிக்கு சார்பில் குற்றவியல் சட்டத்தின் 127 ஆவது சரத்தின் கீழ் மெஜிஸ்ட்ரேட் உத்தியோகபூர்வ இல்லத்தில் வாய்மூலம் ஒன்றை அளிக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. கொழும்பு குற்றத்தடுப்பு குற்றவியல் சட்டத்தின் 127 ஆவது சரத்தின் கீழ் மெஜிஸ்ட்ரேட்டின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வழங்கப்பட்ட வாக்குமூலம் அதே நாள் ஊடகங்களில் வெளிவந்ததோடு கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் சாட்சியாளர்களிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளன. அந்த வாக்குமூலங்கள் குறித்து கேள்வி எழுப்பப்பட வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி வேண்டுகோள் விடுத்த பிறகு அந்த வாக்குமூலம் தொடர்பான தகவல்கள் அடங்கிய புத்தகம் ஜூன் மாதம் பத்தாம் திகதி சமர்ப்பிக்குமாறு கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு கட்டளையிட்ட பின் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

அதன்படி ஜூன் மாதம் 10ஆம் திகதி வழக்கு விசாரிக்கப்பட்ட போது புத்தளம் மேல் நீதிமன்ற நீதியரசர் நதிஅபர்னா சுவந்துருகொட நியமிக்கப்பட்டிருந்தார். இந்த வழக்கு தமது முன்னிலையில் விசாரிப்பது தொடர்பாக எதுவும் எதிர்ப்பு இருக்கின்றதா என வழக்கு தரப்பினரிடம் வினவிய போது அவ்வாறு எதிர்ப்பு ஏதும் இல்லை என தெரிவித்த பின் வழக்கு விசாரணை ஆரம்பமானது.

பிரதிவாதி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் தொடர்பான குறுக்கு விசாரணை முடிந்தது. அதே தினம் இரண்டாவது பிரதிவாதி நபரான அதிபரின் குறுக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டது. சாட்சியாளரின் ஆரம்ப வாக்குமூலங்கள் தொடர்பான புத்தகம் கொண்டுவரப்படாதனால் வழக்கு விசாரணை மீண்டும் ஆகஸ்ட் 22, 23 ஆம் திகதி மேலதிக விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது. அதே போன்று தகவல் அடங்கிய புத்தகங்களை நீதிமன்றத்திற்கு கொண்டுவராதது தொடர்பாக செயற்பட்ட அதிகாரிகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு குற்றவியல் திணைக்களத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்புமாறு நீதிமன்றத்தின் பதிவாளருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி ஆகஸ்ட் 22ஆம் திகதிக்கு வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட போது வழக்கை நெறிப்படுத்துகின்ற பிரதி சொலிசிட்ட ஜெனரல் லக்மினி கிரிஹாகம வருவதில்லை என அறிவித்த பின் வழக்கு ஒக்டோபர் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### ஜனாதிபதி சட்டத்தரணி நளிந்த இந்திரதிஸ்ஸ்

எனது சேவைப்பெறுநர் ஓர் அனுபவமிக்க சட்டத்தரணி. அவர் வழக்குகளுக்காக நீதிமன்றம் வருகிறார். நாங்கள் நீதிமன்றம் வருகிறோம். ஆனால் சட்டமா அதிபர் திணைக்களம் வருவதில்லை. இவ்வாறு நீதிமன்றங்களில் காலத்தை கழிக்க முடியாது. இந்த வழக்கு தொடர்பான சம்பவங்களிடையே வாக்கு மூலங்களை எடுத்திருப்பது முதலாம் பிரதிவாதி கைது செய்யப்பட்ட பின்பாகும். கடந்த வழக்குத் தினத்தன்று நீதிமன்றம் விடுமுறை காலமாக இருந்தது. கடந்த வழக்கு நீதிமன்றத்துக்கு விடுமுறை தினமாக இருந்தும் அதற்கான திகதியை நிர்ணயித்தது நீதிமன்றமாகும்.அது வழக்கை துரிதமாக விசாரிக்க வேண்டும் என்பதற்காகவே ஆனால் முறைப்பாட்டை நெறிப்படுத்தும் பிரதி சொலிசிட்ட ஜெனரலுக்கு வேலைப்பழு என்று கூறி வர முடியாது என்று கூறினார். நீதிமன்றம் தவிர்ந்த வேலை ஒன்றிற்காக என்று காரணம் கூறி அதனால் வர முடியாது என்று கூறினார்.அதனால் நாங்கள் வரவில்லை. நாங்கள் தயாராகத் தான் இருந்தோம். இன்றும் நாங்கள் சொல்கிறோம். மூன்று நீதிபதிகளைக் கொண்ட மேல் நீதிமன்றத்தின் வழக்காக வரமுடியாது என்று. இந்த விடயம் அவருக்கு கடந்த வழக்கின் போது தெரியும். பிரதி சொலிசிட்ட ஜெனரல் முடியாவிட்டால் சுதர்சன இருக்கிறார்.இந்த இருவரில் ஒருவருக்கு சரி வந்து இருக்கலாம். சோடிக்கப்பட்ட தொடர்ந்து கொண்டு நடத்த முடியாத வழக்காக இருப்பதனால் இவ்வாறு வழக்குகளை தொடர்ந்த பின் உண்மையைச் சொல்லி நீக்கிக்கொள்ள வேண்டும் .ஆனால் இப்போது காலத்தை கேட்டு ஒத்திப் போடுகிறார்கள். இது பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் போடப்பட்ட வழக்கு.அவ்வாறான வழக்குகளை விரைவாக விசாரிக்க வேண்டும் என்பது சட்டத்தின் ஏற்பாடாகும். அதனால் முறைப்பாட்டுக்காரரின் கோரிக்கையை நிராகரித்து இரண்டாவது சந்தேக நபரின் சார்பில் குறுக்கு கேள்விகளை அவருடைய சட்டத்தரணிக்கு கேட்க இடமளிக்க கேட்டுக்கொள்கிறேன்.

### சட்டத்தரணி சமிந்த அத்துகோரல்

இது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினால் போடப்பட்ட வழக்காகும். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி அவற்றை முன்னுரிமையளித்து விசாரிக்க வேண்டும். ஆகஸ்ட் 22 ,23 நீதிமன்ற விடுமுறை காலமாக இருந்தும் இதனை விசாரிக்க வேண்டும் என்று திகதியளிக்கப்பட்டது. அப்போது நாங்கள் தயாராக இருந்தோம். ஆனால் சட்டமா அதிபர் திணைக்களம் கால அவகாசம் எடுத்தது. அன்று தொழிலின் கௌரவம் மற்றும் ஒழுக்க விதிகளை கவனித்து எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இந்த முதலாவது சாட்சியாளரிடம் ஆரம்ப சாட்சி விசாரணையின் போது ஒரே நாளில் இருவர் சாட்சியங்களை நெறிப்படுத்தினார். ஆனால் இன்று ஒருவராவது வந்தில்லை. இதன் காரணமாக இதனை ஒத்திப் போடுவதை நாங்கள் எதிர்க்கின்றோம்.எனது சேவைப்பெறுநரை பொலிஸார் கைது செய்யவுமில்லை. சட்டமா அதிபர் சொல்லி கைது செய்யப்பட்டு ஒரு வருடம் உள்ளே வைத்தார்கள். இன்று குறுக்கு கேள்வி கேட்பதற்கு நாம் தயார்.

### அரச சட்டத்தரணி திருமதி லக்மினி கிரிஹாகம்

முறைப்பாட்டை நெறிப்படுத்துவதற்கு உஊ வுயுட 3887ஃ2022

வழக்குக்காக ஒரு செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமையும் இரண்டு நாள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன.

நீதியரசர் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இருவரும் இந்த வழக்கை நெறிப்படுத்தி இருக்கிறார் தானே?

அரச சட்டத்தரணி அது பற்றி எனக்கு ஆலோசனை கிடைக்கவில்லை பிரதிவாதிகள் சட்டத்தரணிகள் சொன்னபடி கடந்த வழக்கிற்கு வரவில்லை ஆனால் அன்று எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

நீதியரசர் திருமதி கிரிஹா கம வருவதில்லை என அந்த வழக்கில் அறிவித்தார் தானே?

அரச சட்டத்தரணி ஆனால் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

நீதியரசர்: தொழில்சார் கௌரவத்திற்காக எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என சட்டத்தரணி தெரிவித்தார்.

அரச சட்டத்தரணி இந்த வழக்கிற்கு உரிய முறைப்பாட்டு ஆவணங்கள் பிரதி சொலிசிட்ட ஜெனரல் பொறுப்பிலே இருக்கின்றது. இன்று பிரதிவாதிகளுக்கு குறுக்கு விசாரணைக்கு இடமளித்தால் முறைப்பாடு செய்தவர்களுக்கு பாதிப்பாக அமையும் எனவே வேறொரு நாளை கேட்கிறேன்.

நீதியரசர் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் லக்மினி கிரிஹாகமவும், சிரேஷ்ட பிரதி சொலிசிட்ட ஜெனரலும் ஆஜரானார்கள் ஆனால் இன்று வருகை தரவில்லை. அரச சட்டத்தரணி முறைப்பாட்டு வழக்கு கோவையின் படி இன்று குறுக்கு விசாரணை கேட்பது முறைப்பாட்டுக்காரர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கு பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதன் காரணமாக வழக்கு விசாரணை விரைவில் முடிக்க வேண்டும் என்பதை பிரதிவாதிகள் தரப்பில் பலமுறை தெரிவிக்கப் பட்டது.

நீதியரசர்: வழக்கு விசாரணைக்காக பிரிதொரு தினம் வழங்கப்பட வேண்டும்.ஒக்டோபர் 14 அரச சட்டத்தரணி லக்மினி கிரிஹாகம மற்றும் சுதர்சன ஆகியோர் நவம்பர் 25, டிசம்பர் 2 திகதியை தந்திருக்கிறார்கள்.

நீதியரசர்: ஒன்றரை மாதத்தின் பின் அல்லவா இந்த திகதி இருக்கின்றது. இந்த மாதத்தில் ஒருநாள் இல்லையா?

அரச சட்டத்தரணி வழங்கப்பட்டிருக்கின்ற திகதிகள் இவை. இந்த மாதத்தின் ஏனைய தினங்கள் தமக்கு அசௌகரியமாக இருப்பதாக திருமதி கிரிஹாகம தெரிவித்தார்.

நீதியரசர்: ஒக்டோபர் 14 நெருங்கிய தினம்.ஒக்டோபர் 14 அவருக்கு முடியுமா என்று கேட்டுப் பாருங்கள்.

அரச சட்டத்தரணி என்னிடம் அவருடைய தொலைபேசி இலக்கம் இல்லை. காரியாலய உதவியாளரிடம் அதை கேட்கிறேன்.

நீதியரசர்: ஒக்டோபர் 14 முடியுமா என்று கேளுங்கள் வழக்கை பின்வைப்போம்.

15 நிமிடத்தின் பின்னர் வழக்கு மீண்டும் விசாரிக்கப்பட்டது.

குற்றவியல் திணைக்களத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள் அறிவித்ததாக அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

"அன்றோ ஒக்டோபர் மாதத்தில் ஒரு நாளும் அவருக்கு வரமுடியாது. அவருக்கு நவம்பர் 25 ஆம் திகதியே வரமுடியும் என்று தெரிவித்தார்.



### ஜனாதிபதி சட்டத்தரணி நளிந்த இந்திரதிஸ்ஸ்

சட்டமா அதிபர் திணைக்களமே தவறாகத்தான் வேலை செய்கிறது. நீதி அரசர்களை நீங்கிக் கொள்ளுமாறு அவர்களுடைய உத்தியோகபூர்வ இல்லங்களுக்குச் சென்று கேட்கிறார்கள். வேறு நாடுகளின் வழக்குகளில் அப்படி இல்லை. இது சம்பந்தமாக சட்டத்தரணிகள் சங்கத்தின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. நான் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருடன் பேசியுள்ளேன். நீதியரசர்களுக்கு விருப்பமில்லை என்றால் நீங்கி விடச் சொல்லுங்கள் அல்லது காலம் எடுக்கிறார்கள்.இது பிழையான முன்னுதாரணங்கள் ஆகும். இவை நடக்கக்கூடாது அதேபோன்று தான் ரகசிய பொலிசார் புத்தகங்களைக் கொண்டு வருவதில்லை.

சட்டத்தரணி சமிந்த அத்துகோரல்

இந்த முதலாவது, இரண்டாவது சாட்சியாளர்கள் மெஜிஸ்ட்ரேட் முன்னிலையில் அவர்களது உத்தியோகபூர்வ இல்லத்தில் வழங்கிய வாக்குமூலம் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டது குறித்து கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என மெஜிஸ்ட்ரேட் கட்டளையிட்டு இருந்தனர். அந்த உத்தரவின் படி இந்த விசாரணைக்கேற்ப இந்த சாட்சிகளின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அந்த குறிப்புகள் அடங்கிய புத்தகத்தை நீதியரசிற்கு சமர்ப்பிக்குமாறு பெப்ரவரி மாதத்தில் உத்தரவிடப்பட்டிருந்தது. இன்றும் அந்த புத்தகத்தை கொண்டு வரவில்லை.

நீதிபதி வழக்கு 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கின் முதலாம், இரண்டாம் சாட்சியாளர்களுக்கு அத்தினத்தன்று எச்சரிக்கை விடுக்கிறேன். மூன்றாவது சாட்சியாளரை தற்காலிகமாக விடுவிக்கிறேன். மெஜிஸ்ரேட் முன் வழங்கப்பட்ட வாக்குமூலம் ஊடகங்களுக்கு சென்றது சம்பந்தமாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் நடத்திய விசாரணை தொடர்பான அறிக்கை தகவல் புத்தகம் என்பன அடுத்த வழக்கு தினத்தில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார்.

# கல் - எலிய முஸ்லிம் கிராம வரலாறும் பரம்பரையும்!

**என்.எம்.அமீன்**

வரலாறு பற்றிய உணர்வும் வரலாற்று நோக்கும் ஒரு சமூகத்துக்கு மிகவும் அவசியமாகும். கடந்த கால நிகழ்வுகள், அனுபவங்கள் பற்றிய அறிவானது ஒரு சமூகம் சமகாலத்தை விளங்கவும் எதிர்காலத் திரட்டமிடலுக்கும் துணை புரிகின்றது. இந்த வகையில் இஸ்லாம் வரலாற்றுக்கு மிக முக்கியத்துவம் அளிக்கின்றது. அல்குர்ஆனில் கடந்த கால சமூகங்களின் வரலாறு பரவலாகப் பேசப்படுகின்றது. இந்த வரலாறுகளிலிருந்து பாடம் படிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது. கலாநிதி எம்.ஏ.எம்.

சுக்ரி தெரிவித்துள்ள கருத்திலிருந்து கல் - எளிய முஸ்லிம் கிராம வரலாறும் பரம்பரையும் என்ற நூல் பற்றிய எனது கருத்துக்களை ஆரம்பிக்கின்றேன்.

கம்பஹா மாவட்டத்திலுள்ள பாரம்பரிய முஸ்லிம் கிராமங்களில் ஒன்றான கல் - எளிய பற்றி ஊடகவியலாளரும் சமூக ஆர்வலருமான எம்.வை.எம். நஸீர் எழுதிய 316 பக்கங்களைக் கொண்ட நூலை கல் - எளிய கிராமத்தின் வரலாற்றைத் தேடும் ஒரு முயற்சியாக உள்ளது.

இந்நூல் கல் - எளிய கிராமத்தில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த முஸ்லிம்களது வரலாற்றுப் பாரம்பரியம் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள், குடிமக்களின் பரம்பரை போன்றவற்றைத் தேடி தொகுத்துள்ள ஒரு நூலாகும்.

கல் - எளிய கிராமத்தின் வரலாற்றை ஆவணப்படுத்தியுள்ள நூலாசிரியரின் இந்த நூல் கல் - எளியவின் வரலாறு பற்றி வெளிவந்துள்ள முதலாவது நூலாகும்.

கல் - எளிய பற்றி நூலொன்றை வெளியிட வேண்டுமென்ற நூலாசிரியரின் முயற்சி 30 வருடங்களுக்கு முன் ஆரம்பமாகியுள்ளது. ஏனைய நூல்களைப் போலன்றி, வரலாற்று நூல்களை எழுதும்போது ஆதாரங்களுடன் எழுதப்பட வேண்டுமென்பதால் நூலாசிரியர் இதில் விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

இந்த நூலுக்கு அறிமுகம் வழங்கியுள்ள பேராசிரியர் எம்.எஸ். எம். அனஸ், ஒவ்வொரு ஊரும் அவற்றுக்குரிய பண்பாட்டையும் வரலாற்றையும் கொண்டுள்ளன. ஒரு வகையில் பார்த்தால் ஊர்கள் ஒவ்வொன்றும் தனித்தீவுகள் போன்றவை பிரதேசத்துக்குப் பொறுத்தமான பொதுப் பண்புகள் பல இருந்தாலும் ஒவ்வொரு கிராமத்துக்கும் தனித்துவம் உண்டு. உள்ளூர் வரலாறுகளில் இவை முக்கியத்துவம் பெறுகின்றன. இக்கருத்துக்களுக்கு இசைவான பல தகவல்களையும் கல்-எளியவின் தோற்றத்தையும் இந்நூல் நமக்குக் கூறுகிறது.

கம்பஹா மாவட்டத்தின் பல பாகங்களிலும் பரந்து வாழும் முஸ்லிம்களின் வரலாறு பற்றிய பொது ஆய்வுக்கு உதவும் வரலாற்றுச் செய்திகளையும் இந்நூல் தொட்டுச் செல்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

நூலாசிரியர் இந்த நூலை 11 அத்தியாயங்களாகப் பிரித்து எழுதியுள்ளார். கிராமத்தின் அமைப்பு, வாழ்வியலும் பண்பாடும், பள்ளிவாசல்கள், கல்வி, சமயக் கல்வி நிறுவனங்கள், பொது வசதிகள், சங்கங்கள், வரலாற்றுத் தேடல், கல் - எளியவின் ஞாபகப்படங்கள், கல் - எளியவின் பரம்பரை, விபரம், பொழிப்பு என்ற தலைப்புக்களில் தகவல்களைப் பதிவிட்டுள்ளார்.

நூலின் எட்டாவது அத்தியாயம் "வரலாற்றுத் தேடல்" என்ற பெயரில் ஊரின் வரலாறு தொடர்பாக முக்கிய பல தகவல்களை ஆசிரியர் எழுதியுள்ளார்.

கி.பி.1650 ஆம் ஆண்டளவில் நீர்கொழும்பு வரை இருந்த தனது ஆட்சிப் பிரதேசத்தைப் பார்வையிட வந்த கண்டி மன்னன் இரண்டாவது இராஜசிங்கம் இப்பகுதியை பார்த்தபோது இங்கு கறுவாய்ச் செய்கைக்காக காடுகள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டிருந்தது. இதனை அவதானித்த இராஜசிங்க மன்னன் கலேஎலிவெலா (காடு துப்புரவாகியிருக்கிறது) என்று கூறிய வார்த்தை மறுகி கல் - எளிய என்று மாறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பெரும்பான்மை சிங்கள மக்கள் வாழும் ஊர்களுக்கு மத்தியிலே கல்-எளிய கிராமம் அமைந்துள்ளது. இங்கு சிங்கள முஸ்லிம்கள் ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்துள்ளனர். 1915 ஆம் ஆண்டு கம்பளையில் ஆரம்பித்த இனக்கலவரத்தின் போது இங்கு இடம்பெற்ற ஒரு சம்பவம் தவிர, இன்றுவரை இரு சமூகத்தவரும் சகவாழ்வுடன் வாழ்ந்ததாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

1957ஆம் ஆண்டு துமுனகெதர விஹாரைக்கு கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு காணியில்லாத போது அப்போதைய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் எச்.எல்.எம்.ஏ. காதர் விஹாரைக்குத் தேவையான காணியை இலவசமாக வழங்கியதனை நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இது ஊர் ஒற்றுமைக்கு முக்கிய காரணமாக அமைந்தது எனத் தெரிவித்துள்ளார். சிங்கள கிராமத்துக்கு பாதை வசதியில்லாத போது தமது காணியை காதர் ஹாஜியார் வழங்கியுள்ளார். இப்பாதைக்கு அங்கு குடியிருந்த சிங்கள மக்கள் காதர் லேன் எனப் பெயரிட்டுள்ளதும் பிரதேச சிங்கள முஸ்லிம் ஒற்றுமைக்குச் சான்றாக இருப்பதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

நூலாசிரியர் இந்த நூலில் ஊரின் வரலாற்றுக்குச் சான்றாகவுள்ள புகைப்படங்களை உள்ளடக்கியுள்ளார். 1953 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பள்ளிவாசலின் முகப்புத் தோற்றப்படம், 2012 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட தற்போதைய பள்ளிவாசலின் படம், 100 வருடங்களுக்கு முன் அணியப்பட்ட திருமண ஆடைகள், 1949 ஆம் ஆண்டு கல் - எளியவிலிருந்து முதன் முதலில் மக்கா சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றித் திரும்பிய கஸ்ஸாலி ஹாஜியாரின் மனைவி பாத்துமுத்து சொஹறா ஊரின் பெண்களுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம் இந்நூல் இடம்பெற்றுள்ளது. இப்படம் அக்கால முஸ்லிம் பெண்களின் ஆடைக் கலாசாரம் எப்படி இருந்தது என்பதைக் காட்டுகிறது.

கல்-எளிய என்றதும் முதலில் நினைவுக்கு வருவது கல்- எளிய முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியாகும். இலங்கையின் முதலாவதுமுஸ்லிம் அரபுக் கல்லூரி இதுவாகும். இதன் ஸ்தாபக உறுப்பினர்களது படங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நூலிலுள்ள விசேடமான அம்சம் கல்-எளிய முஸ்லிம்களின் பரம்பரை பற்றிய அத்தியாயமாகும். குடும்பப் பரம்பரையை வடிவமைக்கும் போது புதிய நடைமுறை ஒன்றினை நூலாசிரியர் அறிமுகப்படுத்தியுள்ளார்.

1700 ஆம் ஆண்டளவில் திஹாரியிலிருந்து இடம்பெயர்ந்த கல்-எளியவுக்கு வந்த நான்கு குடும்பங்களில் எஞ்சியிருந்த ஷேகு காஸிம் குடும்ப விபரத்துடன் ஆரம்பித்து 522 குடும்பங்களது பெயர் விபரங்கள் நூலில் இடம் பெற்றுள்ளன.

நூலாசிரியர் நஸீர் தனது நூலை வாய்வழிச் செய்திகள் பலவற்றை பலரிமும் வினவி இந்த நூலைத் தந்துள்ளார். பேராசிரியர் அனஸ் கூறுவது போன்று இந்த நூலின் இறுதி அத்தியாயம் பரம்பரையியல் தொடர்பானது. கிராமங்கள் பற்றிய வரலாற்றை எழுதும்போது தெரிவு செய்யப்பட்ட அளவிளாவது குடும்பப் பரப்பரையினைக் கூற முடியுமாயின், பல்வேறு வரலாற்று அனுமானங்களுக்கு அது சான்றாக அமையும். எம்.வை.எம்.நஸீர் அதிலும் கவனத்தைச் செலுத்தியுள்ளார் என்று தனது அறிமுகக் குறிப்பில் பேராசிரியர் அனஸ் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு விலாசம் உண்டா என சில சக்திகள் எழுப்பும் கேள்விகளுக்கு ஊடகவியலாளர் நஸீர் தனது கிராமத்தில் வரலாறு, பண்பாடு, கலாசாரம் என்பவற்றை உள்ளடக்கி இந்த நூலை அழகாக அச்சில் வெளியிட்டுள்ளார்.

சகோதரர் நஸ்ரின் மூன்று தசாப்த முயற்சி மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அமையும்.

750 ரூபா விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த நூலை கல் - எளிய மிர்களி மன்ஸில் என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.








உலக ஆசிரியர் தினம் (06) நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டது. இதன்படி நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியில் வெள்ளிக்கிழமை (07) கல்லூரியின் அதிபர் எஸ் ரவிச்சந்திரன் தலைமையில் ஆசிரியர் தினம் கொண்டாப்பட்டது இதன்போது நுவரெலியா வலய கல்விப்பணிபாளர் லசந்த அபேரத்ன மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்ததை படங்களில் காணலாம்.

# நிந்தவூர் ஹர்பானுக்கு மூன்று விருதுகள்



நிந்தவூரைச் சேர்ந்த சமூக சேவையாளர் கலாநிதி முகம்மது ஜூனைதீன் அஹமட் ஹர்பான், சமூக சேவைக்கான மூன்று பட்டங்களுடன் கூடிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

இலங்கை ஜோதிடம், மாயவியல், கலாச்சார புத்தர் அறக்கட்டளையின் 16 ஆவது ஆண்டு நிறைவுடன், வல்பொல ஸ்ரீசத்தானந்தராவண குப்த வித்தியா குருகுல முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் மேற்படி கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் கலாநிதி அஹமட் ஹர்பான் சிறப்பு சமூக சேவைகளைக் கௌரவிக்கும் வகையில் தேசபந்து, விஸ்வ அபிமானி, சாமானிய ஆகிய பட்டங்களுடனான விருதுகள் வழங்கப்பட்டன.

இலங்கை ஜோதிடம், மாயவியல் கலாச்சார புத்தர் அறக்கட்டளையின் தலைவரும், நிறுவுனருமான வணக்கத்துக்குரிய டாக்டர். வல்பொல சத்தானந்த மஹாஸ்த வீரவின் சிபார்சில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விஞ்ஞான ஆய்வுகூட கண்காட்சி



(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுகூட கண்காட்சியொன்று (6) இடம்பெற்றது.

மாணவிகளின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கண்காட்சி கூடத்தை பாடசாலை மாணவிகள் பார்வையிட்டு பயன்பெற்றனர்.

பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தலைமையில் திறந்து வைக்கப்பட்ட இந்த கண்காட்சி கூட நிகழ்வில், பகுதித் தலைவர்களான எஸ்.பாறூக் கான், கே.ஆர். எம்.இர்ஷாத், எம்.எல்.எம்.முஸம்மில் உட்பட்ட ஆசிரிய, ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

மாணவிகளின் நலன் கருதி கண்காட்சியை ஏற்பாடு செய்த விஞ்ஞான பாட ஆசிரியைகளான கே.ஆர்.எப்.இஷாரா, திருமதி எப்.எப்.முனாஸ்தீன், என்.ஆயிஷா சுல்பா ஆகியோருக்கு அதிபர் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார்.



# வீழ்ச்சியடைந்த நாட்டை கட்டியெழுப்ப அபிவிருத்தி வேலைத்திட்டமொன்று அவசியம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு!



நாட்டின் வருமானத்தைப் பெருக்கும் வகையில் வரிக் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என்றும், அரசாக செலவழிக்கும் போது தேவையை இலக்காகக் கொண்டு செலவழிக்க வேண்டும் எனவும், அந்த இலக்குகளை எட்டும் விதமாக அது அமையப்பெற வேண்டும் என்றும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறானதொரு நிலையில் எமது நாட்டுக்கு அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதே புதிய பிரவேசமாக அமையும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் எவ்வளவு அழுத்தங்களும் அசௌகரியங்களும் இருந்தாலும் அதை குறைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்றாலும், இந்த அரசாங்கத்தில் சமூக பாதுகாப்பு திட்டமொன்று இல்லை எனவும், ராஜபக்ச குடும்பத்தை பாதுகாத்த வன்னம் அமைச்சுகளை பெருக்கிக் கொள்ளும் பாதுகாப்புத் திட்டமே அவர்களுக்கு உள்ளதாகவும், தற்போது 38 இராஜாங்க அமைச்சர்கள் உள்ளதாகவும் மேலும் பலர் நியமிக்கப்படவுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்த நாமல் ராஜபக்ச பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய பேரவைக்கு நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு, நாட்டின் கொள்கை முன்னுரிமைகளை உருவாக்குவதற்குத் தேவையான குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால திட்டங்களை தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இது நகைப்புக்குரிய விடயம் என்றும், நாட்டை அழித்த ராஜபக்சவிடமிருந்து தீர்வுகள் காண வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவர்கள் மக்களை ஏமாற்றிய வன்னம் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இது போன்ற அரசியல் மோசடிகளில் அங்கம் வகிக்க ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியோ தயாராக இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் யட்டிநுவர தேர்தல் தொகுதிக் கூட்டம் இன்று (08) இடம் பெற்றது. இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் யட்டிநுவர தொகுதி அமைப்பாளர் கெமுனு அபயசுந்தர ஏற்பாடு செய்திருந்ததோடு, இதில் ஏராளமான ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ரணசிங்க பிரேமதாஸ காலத்தில் இரண்டு உள்ளக கிளர்ச்சிகள், பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்ட போதும் பொருளாதாரச் சுருக்கம் ஏற்படவில்லை எனவும், அவர் 200 ஆடைத் தொழிற்சாலைகள் திட்டத்தைத் தொடங்கினார் எனவும், அதற்கான விமர்சனங்கள் எப்படி இருந்தாலும், தற்போதைய நாட்டின் வருமானம் ஆடைத் தொழிலால் தீர்மானிக்கப்படுவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அகால மரணமடையாமல் இருந்திருந்தால் 500க்கும் மேற்பட்ட ஆடைத் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு எமது நாடு முன்னோக்கிச் சென்று இருக்கும் எனவும் தெரிவித்தார்.

# கத்தார் தேசிய கால்பந்தாட்ட அணியின் பயிற்சி அமர்வு!





(கத்தாரில் இருந்து முஸாதிக் முஜீப்)

கத்தார் தேசிய கால்பந்தாட்ட அணியின் பயிற்சி அமர்வில் கலந்துகொள்வதற்காக திங்களன்று (03) ஜாசிம் பின் ஹமாத் மைதானத்தில் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். FIFA உலகக் கோப்பைக்குத் தயாராகி வரும் நிலையில் அவர்களுக்கு பாரிய ஆதரவைக் காட்டினர்.

மைதானத்தின் வாயில்கள் மாலை 4 மணிக்கு திறக்க திட்டமிடப்பட்ட நிலையில், நூற்றுக்கணக்கான ரசிகர்கள் தேசியக் கொடிகளை ஏந்தியபடி தங்கள் தேசிய வீரர்களை சந்திக்க வெகு முன்னதாகவே மைதானத்திற்கு வருகை தந்திருந்தனர்.

மாலை 6 மணியளவில் தொடங்கிய பயிற்சிக்கு முன்னதாக தங்களுக்குப் பிடித்த வீரர்களுடன் பலர் செல்ஃபி எடுத்துக்கொண்டனர். தேசிய வீரர்களுக்கு ஆதரவாக ரசிகர்கள் பாடல்களைப் பாடி தமது ஆதரவை வெளிக்காட்டினர்.

“ரசிகர்களின் இத்தகைய ஆதரவு எங்களை பெருமைப்படுத்தியுள்ளது. உலகக் கோப்பையின் போது அவர்கள் எங்களுக்குப் பின்னால் நிற்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் எங்களின் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என்று நாங்கள் உறுதியளிக்கிறோம், மேலும் எங்கள் அறிமுகத்தில் வலுவான தோற்றத்தை வெளிப்படுத்துவோம் என்று கத்தார் அணித்தலைவர் ஹசன் அல் ஹைடோஸ் கூறினார்.

உலகக் கோப்பையில் கத்தாருக்கு ரசிகர்களின் ஆதரவு முக்கியமானது என்று பஸ்சம் அல் ராவி கூறினார்.

“சமூக ஊடகங்களில் ரசிகர்களிடமிருந்து எங்களுக்குக் கிடைக்கும் ஆதரவு உலகக் கோப்பைக்கு முன்னதாக எங்களுக்கு ஒரு பெரிய மன உறுதியை அளிக்கிறது. பெரிய சவாலுக்கு நாங்கள் மிகவும் உற்சாகமாக இருக்கிறோம் மற்றும் வலுவான செயல்திறனை வழங்க தயாராகி வருகிறோம். கடவுள் விரும்பினால், அனைவரின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்வோம், ”என்று அவர் கூறினார். எதிர் வரும் நவம்பர் 20 ஆம் திகதி அல் பைடிட் மைதானத்தில் ஈக்வடார் அணிக்கு எதிரான குழு ஏ போட்டியுடன் உலகக் கோப்பையை கத்தார் தொடங்கவுள்ளது.

# மடவளை பஸாரில் இரத்ததான முகாம்

(ராபி சிஹாப்தீன்)

கண்டி - மடவளை பஸார் வை எம் எம் ஏ அமைப்பினால் 16வது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததான முகாம் இம்மாதம் எதிர்வரும் 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 தொடக்கம் மாலை 3.00 மணி வரை மடவளையில் அமைந்திருக்கும் சன்ஷைன் திருமண மண்டபத்தில் அமைப்பின் தலைவர் ஏ.எல்.எம். ரிஷாட் தலைமையில் நடைபெறவுள்ளதாக மடவளை பஸார் வை.எம்.எம்.ஏ அமைப்பின் பொதுச் செயலாளர் ஏ.எம். ஹசன் பிராஸ் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவையின் தேசிய தலைவர் இஹ்ஸான் ஹமீத் அவர்கள் கலந்து கொண்டு நிழ்வை ஆரம்பித்து வைக்க உள்ளார். அன்றைய தினம் இரத்ததானம் வழங்குபவர்களுக்கு சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரத்ததான முகாமில் பிரதேச மக்கள் அனைவரும் கலந்துகொண்டு இரத்ததானம் செய்ய முன்வருமாறு மடவளை பஸார் வை எம் எம் ஏ அமைப்பின் பொதுச் செயலாளர் ஏ.எம். ஹசன் பிராஸ் மேலும் வேண்டுகோள் விடுத்தார்.

# நவ லங்கா நிதஹஸ் கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளராக ருஷ்தி உஸ்மான் நியமனம்





(ரிஹ்மி ஹக்கீம்)

முன்னாள் அத்தனகல்ல பிரதேச சபை வேட்பாளர் அல்ஹாஜ் ருஷ்தி உஸ்மான் நவ லங்கா நிதஹஸ் கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நவ லங்கா நிதஹஸ் கட்சியின் அமைப்பாளர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த செப்டம்பர் 29 ஆம் திகதி பத்தரமுல்லையில் உள்ள கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கட்சியின் மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது கம்பஹா மாவட்ட அமைப்பாளர் பதவிக்கான நியமனக்கடிதம் அல்ஹாஜ் ருஷ்தி உஸ்மானுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒலுவில் அல்-ஹம்றாவில் பல்வேறு விசேட நிகழ்வுகள்!





(எஸ்.அஷ்ரப்கான்)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் பல்வேறு விசேட நிகழ்வுகள் வியாழக்கிழமை (06) பாடசாலையில் இடம் பெற்றது.

அதிபர் அஷ்-ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம் தலைமையில் உதவி அதிபர் எம்.எச்.மஹ்மூத் நஸீம் இன் வழி நடாத்தலில் உதவி அதிபர், சிரேஷ்ட ஆசிரியர்களின் மேற்பார்வையில் இடம்பெற்ற இந்நிகழ்வினை, பாடசாலையின் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், மாணவர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்,

தனவந்தர்களின் அனுசரனை மற்றும் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அதிபர் அஷ்-ஷெய்க் யு.கே. அப்துர் ரஹீம், பிரதி அதிபர்களான எம். ரீ.எம்.

சியாத், எம்.ஏ.கமறுந்நிஸா, உதவி அதிபர்களான எம்.ஜே.எம்.றினீஸ், எம்.எச்.மஹ்மூத் நஸீம் உட்பட சிரேஷ்ட, கனிஷ்ட ஆசிரியர்களும் மாணவர்களால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இங்கு ஆசிரியர்களின் கலை, கலாச்சார, விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு பரிசில்கள் மற்றும் நினைவுக் கிண்ணங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பிறை எப்.எம்.அறிவிப் பாளர், கவிஞர், ஆசிரியர் ஜே. வஹாப்தீன் இந்நிகழ்வினை திறம்பட தொகுத்து வழங்கினார்.

# மருதமுனையில் தரமுயர்த்தப்பட்ட ஆய்வுகூடம்

(நூருள் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட, மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் அவர்களுக்கான வரவேற்பு நிகழ்வும் வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தை தரமுயர்த்தும் வைபவமும் நேற்று (08) இடம்பெற்றது.

மாவட்ட வைத்திய அதிகாரி டாகடர் ஏ.எல்.எம். மிஹ்லார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாகவும் கல்முனை சுகாதார பணிமனையின் பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித் கௌரவ அதிதியாகவும் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம். மாஹிர் விசேட அதிதியாகவும் தரமுகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் பி.ஜி.பி. டானியல், சுற்றாடல் மற்றும் தொழில் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம். பௌசாத், தொற்றா நோய்த் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ். இர்ஷாத், ஆயுள்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ. நபீல், பிராந்திய பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் எம்.எச்.எம்.ஸஃரூக், கணக்காளர் உசைனா பாரிஸ் பிராந்திய மருந்தாளர் இந்திரகுமார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டிருந்தனர்.

# இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வாணிவிழா!





ஆயகலைகள் அறுபத்து நான்கிற்கும் முதல்வியாம் சரஸ்வதி தேவியின் பூஜையின் மூன்றாவது நாள் பூஜைகள் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் பிராந்திய நிலையம் மட்டக்களப்பில் (4) பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தினால் சிறப்பாக நடைபெற்றது.

இதன் போது பல்கலைக்கழக மாணவர்களினால் பல்வேறுபட்ட நிகழ்ச்சி நிரல்கள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் அதன் முதலாவது அம்சமாக மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், சமுத்திர பல்கலைக்கழகம் மட்டக்களப்பு பிராந்திய நிலையத்தின் பிரதி பணிப்பாளர் சுபராஜன் அவர்களின் தலைமையுரை, பல்கலைக்கழக மாணவர்களின் கலை, கலாச்சார அம்சங்கள் என்பன இடம்பெற்றன.

இதன் போது போது சமுத்திர பல்கலைக்கழகம் மட்டக்களப்பு பிராந்திய நிலையத்தின் பிரதி பணிப்பாளர் சுபராஜன் மற்றும் இணைப்பாளர் அருள்சிவம் மற்றும் விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக கல்வி சார், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# அரசாங்க வைத்தியசாலைகளில் 6259 மில்லியன் பெறுமதியான பாவனைக்கு உதவாத மருந்துகள் விநியோகம்?



அஹ்ஸன் அப்தர்

அஸ்பிரின், அமொக்ஸிலின் அல்லது போலிக் எசிட் போன்ற பரவலான மருந்துகளை அரசாங்க வைத்தியசாலைகளில் இருந்து நீங்கள் பெற்றிருந்தால் குறித்த மருந்துகள் தொடர்பில் அவதானமாக இருங்கள். ஏனென்றால் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மருந்துகளை உரிய முறையில் களஞ்சியப்படுத்தாமையின் காரணமாக 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையில் 6259 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளன. “இந்த மருந்துகள் பயன்பாட்டுக்குப் பொருத்தமல்லாதவை என அடையாளம் காணப்படும்போது 99 வீதமானவை நோயளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன” என அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மருத்துவ வழங்கல் பிரிவிற்கு சொந்தமான களஞ்சியங்களில் வெப்பநிலை பேணப்படாதிருந்ததுடன் செல்சியஸ் பாகை 25 இற்கு குறைந்த வெப்ப நிலையொன்றில் வைக்கப்பட வேண்டுமென உறைகளில் மேல் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 104 மில்லியன் பெறுமதியான 23 மருந்து வகைகள் செல்சியஸ் பாகை 29.6 இற்கும் 32.7 இற்கும் இடையிலான வெப்பநிலையில் 730 நாட்களுக்கும் அதாவது 02 வருட காலத்தை விட மேற்பட்ட காலமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை 2017 மார்ச் 03 ஆம் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

2011 தொடக்கம் 2016 வரை தரம் குறைவாக இருந்த மருந்துகளின் பெறுமதி:

| வருடம் | செலவுகள் |
|---|---|
| | ரூபாய் மில்லியன் |
| 2003-2010 | - |
| 2011 | 971 |
| 2012 | 1,204.00 |
| 2013 | · |
| 2014 | 363.5 |
| 2015 | 233.9 |
| 2016 | 602.4 |
| | ------- |
| | **3,374.80** |

அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்ட மருந்துகளுக்கிடையே கண் போன்ற மென்மையான பாகங்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற மருந்துகளும் சிறுநீரக நோய், மகப்பேற்று சத்திரசிகிச்சை என்பவைகளுக்கு தேவையான மருந்துகளும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

எடுத்துக்காட்டாக தடுமல், தலைவலி, பல் வலிஇ தோல் அரிப்பு மற்றும் காய்ச்சலினை குறைப்பதற்கு பரவலாக வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படும் அஸ்பிரின் 25 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் களஞ்சியம் செய்யப்பட்டிருக்க வேண்டும். பற்றீரியா தொற்றுகளில் இருந்து பாதுகாப்பு வழங்க பயன்படுத்தப்படும் கெப்டாசிடைம் மருந்தும் 25 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் களஞ்சியம் செய்யப்பட்டிருக்க வேண்டும். என்றாலும் பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட தினத்தில் இந்த இரண்டு மருந்துகளும் 31 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

எட்டு நாட்களுக்கும் மேல் குறித்த வெப்பநிலையில் களஞ்சியம் செய்யப்பட்டிருந்த அஸ்பிரின் மருந்துகளின் ஒட்டுமொத்த பெறுமதி 4644537 ரூபாய் ஆகும். 53 நாட்களுக்கும் மேல் குறித்த வெப்பநிலையில் களஞ்சியப் செய்யப்பட்டிருந்த சிட்ரிஸைன் மருந்துகளின் ஒட்டுமொத்த பெறுமதி 4644537 ரூபாய் ஆகும்.

| களஞ்சிய சாலை இலக்கம் | SR இலக்கம் | மருந்தின் பெயர் | மருந்தின் அளவு | மருந்தின் பெறுமதி | களஞ்சிய சாலை பொறுப்பேற்ற மருந்தா? | மருந்து வைகப்பட வேண்டிய வெப்பநிலை | 2017/03/06 அன்று வைக்கப்பட்டிருந்த வெப்பநிலை | மருந்து கொண்டுவரப்பட்ட திகதி | களஞ்சியசாலையில் மருந்து வைக்கப்பட்டிருந்த நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ பா ய் | | | | | |
| 02 கீழ்மாடி | 00205403 | Aspirin150mg | 5,294,200 | 4,644,537 | இல்லை | 25°c | 31° C | 2017.02.23 | 08 |
| 01 கீழ்மாடி | 00101602 | Ceftazidime inj. 1g | 150,000 | - | இல்லை | 25°c | 31° C | 2017.01.13 | 53 |
| கீழ்மாடி | 00100905 | Co amoxiclav inj. 1000/200mg | - | - | இல்லை | - | - | 2017.02.09 | 25 |
| 02 கீழ்மாடி | 00204701 | Enoxaparin inj. 40mg/0.4ml PF syringe | 120,000 | 41,939,471 | இல்லை | 30° | - | 2017.02.27 | 07 |
| 0 8 | 00501102 | Cetirizine HCL 5ml,60 ml bot | 90,000 | 2,474,955 | இல்லை | 25°c | 30° C | 2017.02.15 | 19 |
| 0 8 | 00501301 | Chlorpheniramine Maleate Tab 4mg | 60,000,000 | 6,276,528 | இல்லை | 30°C | - | 2017.01.23 | 42 |
| 0 8 | 00800701 | Ranitidine HCL ing.50mg/2ml AMP | 400,000 | 2,043,300 | இல்லை | 30° C | - | 2017.01.25 | 40 |
| 0 7 | 00701201 | Carbimazole tablet 5mg | 7,029,000 | 11,441,610 | இல்லை | 25°c | - | 2017.02.09 | 25 |
| 0 2 | 00200501 | Mannitol Intravenous Infusion BP(20% | 40,000 | 3,189,360 | இல்லை | 20° C-30° C | 32° C | 2017.02.20 | 11 |
| | | | | **72,009,761** | | | | | |

காய்ச்சல், தோல் அழற்சி, பூச்சிக்கடி மற்றும் உணவு ஒவ்வாமை என்பவற்றிற்கு சிகிச்சை வழங்க பயன்படும் சிட்ரிஸைன் மருந்து 25 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் இருந்திருக்க வேண்டும் என்றாலும் சோதனையின் போது 30 பாகை செல்சியஸில் அவை வைக்கப்பட்டிருந்தது அம்பலமாகியுள்ளது.

இதே போல இவற்றுள் கர்ப்பினித் தாய்மார்களின் சிசு ஆரோக்கியத்திற்காக வழங்கப்படும் போலிக் எசிட் மருந்துஇ நியுமோனியாவுக்கு வழங்கப்படும் அமொக்ஸிலின்இ சிறுநீர்ப்பை மற்றும் இனப்பெருக்க உறுப்புக்களில் ஏற்படும் நோய்களுக்கு வழங்கப்படும் ஒப்லொக்ஸாசின் போன்ற பல்வேறு மருந்துகள் களஞ்சிய நெறிமுறைகளுக்கு முரணாக களஞ்சியப்படுத்தப்பட்ட மருந்து வகைகளுல் அடங்கும்.

மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியங்களில் நாடு முழுவதும் அமைந்துள்ள 27 பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மருத்துவ வழங்கல் அந்த நிலையங்களினால் மாகாண சபையின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களுக்கு மீண்டும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

செல்சியஸ் 25 பாகைக்கு குறைந்த வெப்ப நிலையில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய ரூபா 11.30 மில்லியன் பெறுமதியான மருந்துகளில் 61 மருந்து வகைகள் பிரதேச மருத்துவ வழங்கலில் 04 பிரிவுகளில் செல்சியஸ் பாகை 27 இற்கும் 38 இற்கும் இடையேயான வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டியிருந்தது.

ரூபா 4.09 மில்லியன் பெறுமதியான 09 மருந்து வகைகள் அனுராதபுரம் பிரதேச மருத்துவ பிரிவில் இட வசதிகள் இல்லாததால் களஞ்சியங்களிலின் திறந்த வெளியிலும் விறாந்தைதகளிலும் களஞ்சியம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணத்தில் 10 வைத்தியசாலைகளில் செல்சியஸ் பாகை 25 இற்கும் குறைவான வெப்பநிலையில் வைக்கப்பட வேண்டிய மருந்துகள் செல்சியஸ் பாகை 34 இற்கும் 36 இற்கும் இடையிலான வெப்பநிலையில் களஞ்சியம் செய்யப்பட்டிருந்தது.

அத்துடன் மருத்துவ வழங்கல் பிரிவிற்குரிய திகன வறாப்பிட்டியில் அமைந்துள்ள மருத்துவ வழங்கல் உப களஞ்சியத்தில் செல்சியஸ் பாகை 25 இற்கும் குறைந்த வெப்பநிலையில் களஞ்சியப்படுத்த வேண்டிய ரூபா 65.37 மில்லியன் பெறுமதியான 03 மருந்து விடயங்ககள் செல்சியஸ் பாகை 25 இற்கு மேறப்ட்ட வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

சகல அரசின் வைத்தியசாலைகளுக்காவும் மருந்து வழங்கல்களை வழங்குகின்ற மருத்துவ வழங்குல் பிரிவிலும் பிரதேச மருத்துவ வழங்கல் நிலையத்திலும் மற்றும் வைத்தியசாலைகளிலும் மருந்துக் களஞ்சியம் குறித்த வெப்பநிலையில் காணப்படாமை மருத்துவ வழங்கல்களின் தரத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தமையும் அதன் மூலம் நோயாளிகளுக்கு பல்வேறு வகையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

அரசாங்க மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சில மருந்துகள் பரிந்துரை செய்யப்பட்ட வெப்பநிலைக்குப் புறம்பாக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு போக்குவரத்து மூலம் கொண்டுசெல்லப்பட்டது. மருத்துவ வழங்கல் பிரிவிலும் குளிரூட்டப்பட்ட களஞ்சியத்தில் இடவசதிகள் காணப்படாமையும் மருந்து பற்றாக்குறையைத் தவிர்த்துக் கொள்வதற்கும் அந்த இருப்பு அந்த முறையிலேயே பெறப்பட்டு சாதாரண களஞ்சியத்திற்குள்ளேயே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இதன் போது மருந்துகளுக்கு இழப்பு ஏற்படுமாயின் அந்த இருப்பை மீளளிப்புச் செய்யும் எதிர்பார்ப்பில் உரிய இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவு கையேற்றவாறு குறித்த வெப்பநிலையில் மருந்துகள்





களஞ்சியப்படுத்தப்படாமல் மருந்துகளின் தரத்திற்கு தாக்கம் ஏற்படக்கூடியதாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

அனேக மருந்துக் களஞ்சியங்களில் இட வசதிகள் போதியளவில் இல்லாமையினால் கணிசமான பெறுமதியுடன் மருத்துவ வழங்கல்களின் போக்குவரத்துச் சேவைகள் வழங்குனரினால் கையேற்கப்படாமல் களஞ்சியத்தின் முன்னால் விறாந்தைகளில் வைக்கப்பட்டிருநத்மையும் இடவசதிகள் கிடைத்ததன் பின்னர் அவற்றைக் களஞ்சியங்களிற்கு கையேற்று இருப்பு பெறுவனவுக் குறிப்பு விநியோகித்தல் இடம்பெற்றிருந்தது. களஞ்சியப் பொறுப்பாளரால் கையேற்கப்பட்ட மற்றும் கையேற்கப்படாத ரூபா 72 மில்லியன் பெறுமதியான இருப்புக்கள் மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத்திற்கு முன்பாகவுளள் விறாந்தைகளில் வைக்கப்பட்டிருந்தமை 2017 மார்ச் 03ஆந் திகதி மேற்காண்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் குறிப்பிட்ட காலப்பகுதியில் மருந்துப் பொருட்கள் விநியோகிக்கிப்படுவதனால் மருந்துப் பொருட்கள் காலாவதியாகும் நிலைமை குறைவடைவதுடன் உலக சுகாதார அமைப்பின் தர நிர்ணயத்திற்கேற்ப மூன்றாம் உலக நாடுகளுக்கு மருந்துப் பொருட்கள் காலாவதியாதல் 1 சதவீதம் முதல் 3 சதவீதம் வரை இடம்பெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனினும் மருத்துவ விநியோகப் பிரிவு கோருகின்ற மருந்துப் பொருட்களின் விநியோக செயன்முறைக்கு (கொள்வனவுக் காலமாகிய 11 மாதங்கள் உட்பட) எடுக்கும் காலம் 17 மாதங்கள் ஆவதனால் அக்காலப்பகுதியில் நுகர்விலே பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவதனாலும் புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படுவதனாலும் வைத்திய விஞ்ஞானத் துறையில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாகவும் மறற்றும் மருந்துகளுக்கான தேவையில் 90 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளில் தங்கியிருப்பதனாலும் மருந்துப் பொருட்கள் காலாவதியாவது அவதாணிக்கப்பட்டது.



அரசாங்க கணக்குள் பற்றிய குழு வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் மனித பாவனைக்கு உகந்ததல்லாத மருந்துகளில் 99 சதவீதமான மருந்துகள் பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுவிட்ட போதும் இதனால் பொதுமக்களுக்கு ஏறபட்ட பாதிப்புகள் குறித்து எந்த ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டதாக தகவல் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும்.